# கச்சியப்ப சிவாச்சாரியார் அருளிய கந்த புராணம் - பகுதி 8b
# 4. யுத்த காண்டம் /பாகம் 1/ படலம் 4 (457 - 876)

# kantapurANam of kAcciyappa civAccAriyAr part 8b /canto 4 (verses 457 - 876 )
# In tamil script, Unicode/utf-8 format

---

## Acknowledgements:

Our Sincere thanks go to Dr. Thomas Malten & colleagues of the Univ. of Koeln, Germany for providing with a transliterated/romanized version of this work and for permissions to release the Tamil script version as part of Project Madurai collections.
Our thanks also go to Shaivam.org for the help in the proof-reading of this work in the Tamil Script format.

Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne,

Switzerland.
© Project Madurai, 1998-2007.
Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet.
Details of Project Madurai are available at the website
http://www.projectmadurai.org/
You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

---

உ

செந்திலாண்டவன் துணை

திருச்சிற்றம்பலம்

# கச்சியப்ப சிவாச்சாரியார் அருளிய
# கந்த புராணம்

## பாகம் **8a /4.** யுத்த காண்டம்
## படலம் **4.** இரண்டாநாட் சூரபன்மன் யுத்தப் படலம் **(457-876)**

457 கங்குல்போந் திடுதலுங்
கணபண பன்னகம்
நுங்குறா தகலவே
நோற்றுமால் ஏந்திடுஞ்
சங்கமாய் மதிசெலச்
சக்கரப் படையெனத்
துங்கமோ
டெழுதல்போல்
தோன்றினன் பரிதிய. 1

458 வேறு
இரவி செல்லுமுன்
அவுணர்கோன்
துயிலொரீஇ எழுந்து
மரபி னிற்புரி நாட்கடன்
முடித்துமன் றெய்தித்
திரும ணிப்பெருந்
தவிசிடை இருந்துதன்
சிறுவன்
நெருநல் உற்றிடும்
வசையினை
உளத்திடை 2
நனைந்தான்.
459 நினைதல் உற்றுழி
உளத்திடைப்
பெருஞ்சினம் நீட
இனிய மர்த்தொழிற்

கியாரையும்
விடுக்கிலன் யானே
அனிக மோடுபோய்
மாற்றலர் வன்மையை
அழித்துப்
புனைவன் வாகையென்
ன்னினான் அழிவிலாப் 3
புகழோன்.
செங்கண் வாளெயிற்
றவுணன்இத்
தன்மையைத் தேற்றி
வெங்கண் ஒற்றிரில்
அளப்பிலா¢ தங்களை
விளியா
அங்கண் மாநிலம்
முறைமுறை சூழ்தரும்
அளக்கர்

எங்க ணுஞ்செறி
தானையைத்
தம்மின்கள் என்றான். 4

461 என்ற லுந்தொழு தாயிர
கோடியோர் யாண்டுஞ்
சென்று சென்றுதம்
மன்னவன் பணிமுறை
செப்பத்
துன்று தேர்கரி
பரிமிசைப் படர்ந்தனர்
தொன்னாள்
வென்றி கொண்டநூ
றாயிர வெள₵ளத்தின்
மிக்கோர். 5

462 வேறு
சூலமே கணிச்சி

தண்டந் தோமரங்
குலிசஞ் சாபங்
கோலவாள் பலகை
வட்டங் குந்தம்வேல்
நாஞ்சில் பிண்டி
பாலமே முசுண்டி
சங்கம் பரிதியே
எழுவே தட்டி
பீலிவல் முசல மாதி
பெரும்படை கொண்டு 6
சென்றார்.
463 எண்டகும் இனைய
வாற்றால்
இலக்கம்வெள¢ ளத்தி
னோருந்
திண்டிறல் மகேந்தி
ரப்பேர்த் திருநகர் சுற்றி

யார்ப்ப
விண்டொடு சிகரி
யென்னும் மேருவின்
உச்சி போகிக்
கண்டனன் அவுணர்
மன்னன் கடற்பெருந்
தானைச் சூழல். 7

464 தேக்கினன் கதிருஞ்
செல்லாச் செல்லுறழ்
தானை ஈட்டம்
நோக்கினன் சிந்தை
கொண்ட நோன்மைசார்
துயரம் யாவும்
நீக்கினன் வன்மை
பெற்றான் நேரலர்ப்
பொருது வென்றி
ஆக்கினன் போல

நின்றான் அறத்துடன்
அருளைக் கொன்றான். 8

465 அழிந்திடு கின்ற காலத்
தளக்கரின் ஆர்த்துச்
சூழுங்
கழிந்திடு தானை
கண்டோன் கடிதுபோர்க்
கேக முன்னிச்
செழுங்கதிர் மதியம்
ஆக்குந் திருமணிச்
சிகரி நின்றும்
இழிந்தனன் தலைமை
நீங்கி இழிதொழில்
பயின்ற தீயோன். 9



466 எடுத்தனன் சிலையும்
ஏனைப் படைகளும்

இமையோர்
தொன்னாட்
கொடுத்திடு படைகள்
யாவுங் கொண்டனன்
சுரத்திற் கோதை
தொடுத்தனன் வெரிநில்
தூணி தூககினன்
விரல்கள் தோறும்
அடுத்தபொற் புட்டில்
சேர்த்தான் அண்டங்கள்
அனைத்தும்
வென்றான்.
467 குந்தளச் சுழியற்
குஞ்சிக் கோலமா
மௌல தன்னில்
சுந்தரத் துணர்மென்
தும்பை தொடுத்திடு

பிணையல் சேர்த்தி
மந்தரப் பொருப்பு
மேரு வரையிதென்
றையஞ் செய்யும்
இந்திரப் பெருந்தேர்
ஒன்றின் ஏறினன் இரவி 11
யேபோல்.

468 பண்ணுலாம் புரவிப்
பந்தி பருமிதக்
களிற்றின் ஈட்டம்
எண்ணிலாப் புரவி
மான்தேர் ஏமமாய்ப்
பின்னர் ஏக
அண்ணல்வாள் அவுண
வீரர் அமைச்சர்கள்
அயலிற் செல்ல
விண்ணுலாம் புரிசைக்

கோயில் வீதிகள் கடந்து
சென்றான். 12

469 கோயிலின் எல்லை
நீங்கிக் கோபுரங்
கெழீஇய கொற்ற
வாயிலின் மருங்கு
செல்ல மன்னவன்
வரவு நோக்கிக்
காய்கதிர்த் தபனற்
கண்ட கலிவியன் உலக
மென்ன
ஆயிர நூறு வெள¢ளத்
தவுணரும் புடைசூழ்ந்
தார்த்தார்.
13

470 வேறு
அன்ன காலையில்

அரிமுகன் சேய்அதி
சூரன்
துன்னு தாரகன்
சுதன்அசு ரேந்திரத்
தொல்லோன்
என்ன நின்றிடும்
மைந்தர்கள் இருவரும்
ஏகி
மன்னர் மன்னனை
அடைதலும் இனையன 
வகுப்பான்.
471 திரைகொள்
வேலைபோல் நிறைதரு
கோட்டகஞ் சிறிதோர்
கரையி லாவழி
யுடைந்திடும் அன்னது
கடுப்பப்

பொருதி றற்படை
பலவுள என்னினும்
போற்றும்
அரச ரில்வழி நின்றிடா 15
தன்னவை அழியும்.
472 ஆத லால்இனி நீர்இரு
வீர்களும் அமரின்
மேத கும்பெருஞ்
சேனைக்கு முதல்வராய்
மேவிப்
போதிர் முன்னுற
என்றலும் நின்றிடு
புதல்வர்
ஈது நன்றென
வணங்கியே ஏகினர்
இமைப்பில்.
16

473 தந்த மான்தடந்
தேர்மிசை ஏறியே
சமரில்
கொந்து லாமலர்
வாகையை மிலைச்சிய
குமரர்
வந்த நாற்பெரும்
படையையும்
அணிபெற வகுத்து
முந்து தானையந்
தலைவராய் ஏகினா¢ 17
முறையால்.
474 ஆகும் எல்லையில்
அங்கது நோக்குறா
அடுபோர்
வாகை கொண்டநூ
றாயிர வெள¢ளத்து

மறவோ£¢
ஒகை எய்தியே
அமர்புரி பறந்தலை
உன்னி
ஏகல் மேயினர்
பணிகளுஞ் சேடனும் 18
இரங்க.
475 வேறு
கடந்திகழ் கரிதேர்
பாய்மாக் கலந்திடத்
தானை வீரர்
படா¢ந்திடு கின்ற
காலைப் பருமணி
வயிரத் தேர்மல்
அடைந்திடும் அவுணர்
மன்னர் அளக்கரில்
வடவை சுற்றவ

விடந்தனி நடந்த
தென்ன விண்ணவர் 19
மருளச் சென்றான்.

476 தொண்டகந் துடியே
பம்பை தூரியம் முருடு
கோடு
திண்டிறற் படகம்
மொந்தை திமிலையே
தடாரி தக்கை
கண்டைஆ குளியே
பீலி காகளம் உடுக்கை
பேழ்வாய்
கொண்டதோர் பதலை
சங்கம் குடமுழா
இயம்பிற றம்மா.

20

477 தட்டுடை நெடுந்தேர்

ஆர்ப்பும் தந்தியின்
ஆர்ப்பு சேண்போய்
முட்டுறு கொடிகள்
ஆர்ப்பும் முரட்பரி
ஆர்ப்பும் வீரர்
கட்டுறு கழலின் ஆர்ப்பு
ம்கணிப்பில்பல்
லியத்தின் ஆர்ப்பும்
எட்டுள திசையும்
எல்லா வுலகுமுண்
டெழுந்த அன்றே. 21

478 நீனிற முகில்போல்
மேனி அவுணர்கள்
நீத்தஞ் செல்லக்
கானிறை பூழி ஈட்டங்
ககனமேற் செல்ல
முன்னம்

தானுறு கின்ற காலைச்
சசியென்த் தயங்கிப்
பின்னர்
மீனெனக் கரந்தான்
மேலாம் விரிகதிர்
படைத்த வெய்யோன். 22

479 நேசமொ டென்பால்
வைகும் நெறியினார்
தமக்கு வீடும்
ஆசறு பதங்கள் யாவும்
வைகலும் புரிவேன்
என்னை
ஏசுவர் போலுங் கீழென்
றிகல்புரிந் திடுவன்
என்னாத்
தூசிபார் விடுத்த

தேபோல் துறக்கமேற் 23
சென்ற பூழி.

480 கன்னிறை அழித்த
மொய்ம்பிற் கார்கெழும்
அவுண வெள¢ளம்
துன்னுற நடப்பச்
செல்லுந் தூளியின்
படலைச் செய்கை
என்னென உரைப்பன்
அம்மா இந்திர
னென்போன் வைகும்
பொன்னுல கதனை
வல்லே பூவுல காக்கிற்
றன்றே.
24

481 கண்ணகல் தடந்தேர்
மீதுங் காய்சினக்

களிற்றின் மீதும்
நண்ணிய கொடிகள்
வான்போய் நளிர்புனற்
கங்கை நக்கி
மண்ணுறச் சிதறி ஆடி
அலமரல் மகேந்தி
ரத்தின்
அண்ணல்இன் றழிவன்
என்றே அழுதிறம்
போலும் மாதோ.
482 திங்கள்வெண்
குடையும் நீலத்
திருநிழற் கவிப்புஞ்
செங்கேழ்ப்
பங்கய மலர்ந்த தன்ன
பருமணிக் கவிகை
முற்றுந்

தொங்கலின்
தொகையும்
வெய்யோன்
தொல்கதிர் வரவு மாற்றி
எங்கணுஞ் செறிவுற்
றூழி இருளினை
விளக்கிற் றம்மா. 26

483 வேறு
ஆனவியல் பெய்தஅவு
ணப்படைக ளோடும்
வானெறிகொ
டேஅவுணன்
வையமிசை செல்லத்
தானதுதெ ரிந்தமரர்
தம்மிறைவன் ஓடிக்
கானமர்க டம்பன்அடி
கைதொழுது

சொல்வான். 27

484 அன்றுபுரி
வேள்வியிடை
ஆதியருள் செய்த
துன்றுபடை
ஈட்டமொடு
சூரனெனும்
வெய்யோன்
இன்றுபொரு
வான்விரைவின்
ஏகினன் எதிர்ந்தே
சென்றவனை
வென்றெமது சீர்அருளு
கென்றான். 28

485 ஆம்பரிசு கூறஅவ
னுக்கருள் புரிந்தே

ஏம்பலுறு கேசரியின்
ஏற்றணையின் நீங்கிப்
பாம்பின்வலி
செற்றுலவு பாகுதனை
நோக்கி
வாம்பரிகொள்
நம்மிரதம் வல்லைதரு
கென்றான். 29
486 என்றிடலும் நன்றென
எழுந்துலவை
அண்ணல்
குன்றனைய தேரது
கொணர்ந்துமுனம்
உய்ப்ப
வென்றிஅயில்
அண்ணல்அதன்
மீமிசை புகுந்தான்

மன்றல்மலா¢
சிந்திஅயன் மாலொடு 30
வழுத்த.
487 செழுந்தருண
மேதகைய தோன்மிசை
வானோர்
தொழுந்தலைவ
னாகியமர்
தொல்முருகன் ஏறக்
கொழுந்தழல்
முடித்தனைய
குஞ்சிகெழு பூதர்
எழுந்தனர் தெழித்தனர்
இருங்கடலும் அஞ்ச. 31
488 நாட்டமொரு
மூன்றுடைய நாதனருள்
மைந்தன்

வாட்டமறு
வெவ்வவுணர்
மன்னன்வலி தன்னை
வீட்டும்வகை
சென்றிடுதல்
விண்ணவர் உரைப்பக்
கேட்டனிக பூதர்கள்
கிளர்ந்துபடர் கின்றார். 32
489 பாரிடர்க ளாய்அறுமு
கற்பரவு கின்ற
பாரிடர்ந டப்பவெழு
பூழிபடர்ந் தின்னோர்
பாரிடர்பு £¤ந்தனர்
பரிக்குமெனை
யென்னாப்
பாரிடம்விண்
ணோடுபகர்

தற்கெழுதல் போலும். 33
490 தக்கையொ
டுடுக்கைதுடி சல்லரி
தடாரி
தொக்குடைய
தண்ணுமை
துவைப்பின்மிகு பேரி
மெய்க்குடமு
ழாப்படகம்
வீணைகுழல் ஆம்பல்
கொக்கரை
இயம்பினர்கள்
கோடிகண நாதர்.
34

491 நாடுதவ நாரதனும்
நல்லுவணர் தாமும்
கேடிலிசை வல்லதொரு

கின்னரரு மாகிப்
பாடினர்கு மாரன்அடி
பன்முறை பணிந்தே
ஆடினர்கள்
விண்ணவரும் 35
ஆசில்முனி வோரும்.
492 சண்முகன
தேவல்கொடு
தாவில்இளை யோனும்
எண்மரும்இ
லக்கர்களும் ஈண்டிய
கணத்தின்
வண்மைகெழு
மன்னவரும்
வையமிசை யாகித்
திண்மைபடை
ஊக்கமொடு

சேனையிடை சென்றார். 36

493 மொய்ம்மலி
படைத்தலைவர்
முந்தியுறு தானை
இம்முறையி
னாலொழுக ஈசனருள்
மைந்தன்
செம்மணிவில் வீசியமர்
தேரினிடை ஏகிப்
பொம்மலுறு
தானவர்கள்
போர்முனை
அடைந்தான். 37

494 அடைந்தபொழு
திற்புவியும் அந்தரமு
மாகி
மிடைந்துவரு சூரனிகம்

வெய்தென வளைந்த
தொடா¢ந்துநுகர்
தீவலிதொ
லைத்துமென முந்நீர்
படர்ந்துபுடை சுற்றியிடு
பான்மையது போல. 38

வேறு

வளைந்திடு காலையில்
வயவெம் பூதர்கள்
கிளர்ந்தனர் தெழித்தனர்
கெழுவு தானவா¢
தளந்தனை அடர்த்தனர்
அவருந் தாக்கினர்
விளைந்தது
பெருஞ்சமர் விண்ட
தண்டமே. 39

496 மாச்சினை மரங்களும்
வரையுந் தண்டமும்
தீச்சிகைக் கழுமுளும்
திகிரி நேமியும்
மீச்செலுங் கவண்கலும்
வேலும் நாஞ்சிலும்
ஒச்சினர் பூதர்கள் ஒன்ன 40
லார்கள்மேல்.

497 மெய்ப்படும்
அவுணர்கள் வெகுண்டு
வில்லுமிழ்
அப்பொடு கணிச்சிதண்
டாழி நாஞ்சில்வேல்
முப்புகா இலைப்படை
முசலம் முற்கரம்
கப்பணஞ் சிதறினர்
கணங்கள் தம்மிசை.

498 பற்றுவர் கரிகளைப்
பரியி னங்களை
எற்றுவர் பா£¢தனில்
எறிவர் மாதிரஞ்
சுற்றுவர் விண்ணிடைக்
கிழிப்பர் துண்ணென
முற்றுடல் எருத்தினை
முரித்துச் சிந்துவார். 42
499 இரதமொ ராயிரம்
எடுத்துச் செங்கையில்
பொருகளி ராயிரம்
புரள மோதுவர்
கரிகளொ ராயிரங்
கரங்கொண் டேற்றியே
பரிபதி னாயிரம் பாரின்
வீட்டுவார். 43
500 பாய்பரி யாயிரப்

பத்துப் பாணிகொண்
டாயிர கோடியாம்
அவுணர் தங்களைச்
சேயிரு நிலத்திடைச்
சிதையச் சிந்துவார்
காய்கனல் சொரிதருங்
கடுங்கட் பூதரே. 44

501 குரங்குளைப் புரவியர்
குஞ்ச ரத்தினர்
இரங்குறு தேரினர்
நிலத்தின் ஏகினோர்
வரங்கெழும்
அவுணர்கள் வளைந்து
பூதரைச்
சரங்களில் பிறவினில்
தடிதல் மேயினார். 45

502 மலைதனைச் சிந்துவர்
மறங்கொள் பூதர்தாள்
நிலைதனைச் சிந்துவர்
நெடுங்கை சிந்துவர்
கொலைதனைச்
சிந்துவர் கொய்வர்
மொய்ம்பினைத்
தலைதனைச் சிந்துவர் 46
தறுகட் டானவர்.

503 இவ்வகை மாறுகொண்
டிகல்செய் கின்றுழித்
தெவ்வடு பூதர்தஞ்
சேனை மன்னர்கள்
அவ்விடை ஏன்றுநின்
றமர்இ யற்றுழி
வெவ்வசு ரப்படை
மிகவும் மாய்ந்ததே.

47

504 பொன்றிகழ
படையொடு புவியும்
வானுமாய்
நின்றிடும் அவுணர்கள்
நீடு தொல்பிணக்
குன்றுரு வாகியே
குருதி யாற்றிடைச்
சென்றனர் அளக்கரைத்
திடர தாக்குவார். 48

505 நீடிய வேற்படை
நிமலன் காணுற
வீடினம் யாமினி
வெய்ய தோற்றமேற்
கூடுவ திலையெனக்
குனிக்கு மாறுபோல்
ஆடிய உடற்குறை

அனந்த கோடியே. 49
506 வேறு
மானப் படைசேர்
அவுணப் படையும்
வயமான்
தேர்ப்படையும்
ஏனைப் படையும்
முடிவுற் றிடவே
இவ்வா றிகல்செய்யுங்
கூனற் சடிலப் பூதப்
படையின் கொற்றந்
தனைநோக்கித்
தானை தலைவன்
அதிசூ ரனெனுந்
தனயன்
வெகுளுற்றான். 50
507 தேரா யிரமா யிரமங்

கொருபாற் சேமத்
தொடுசெல்லக்
காரா யிரமுற் றனதன்
படிவங் கதிர்காள்
இமைசார
ஈரா யிரமாம் இவுளித்
தொகைபூண் டீர்க்குந்
தேர்மீதே
ஓரா யிரமாங்
கதிர்போல் அழலா
உரனோ டுறுகின்றான். 51
508 வா£¢வில் லதனை
விரைவில் குனியா
வடிவா ளிகள்போக்கிச்
சோர்வில் லவனும்
எதிர்கின் றனரைத்
துணிசெய் தனன்நிற்ப

ஓர்வில் லொருவன்
தனியே இவண்வந்
துறுபோர் புரிகின்றான்
போர்வில் லறிவன்
இவனே எனவே 52
புகல்கின் றனர்பூதர்.
509 ஓதக் கடல்போல்
அலமந் தலமந்
துலையா இகல்செய்யும்
பூதர்க் கிறைஉக்
கிரனென் றொருவன்
புகைதீ யுமிழ்கண்ணான்
மேதக் கசலந் தரனா£¢
உடலம் வீழும்
படிகீண்ட
சோதிக் கடவுட்
படையுண் டுமிழுந்

தொல்லோன்
இகல்வல்லோன். 53
510 எண்டா னவருக்
கிறைவன் குமரன்
இகல்செய் திடுமாறு
கண்டான் முனியா
விரைவில் படர்வான்
காலன் திறல்கொள்ளும்
தண்டா னதுகொண்
டவனேர் குறுகித்
தடமார் பிடையோச்ச
விண்டான் இவனென்
றவுணப் படையோர்
வெருவா அலமந்தார். 54
511 மாறா கியஉக் கிரன்ஏ
வுதலும் வருதண்

டவன்மார்பில்
கூறா கியசா லிகைசிந்
திடவே கொதியா
வருகின்றான்
பாறா டுகளத் திடையீங்
கிவனைப் பலியூட்
டுவனென்னா
நூறா யிரம்ஆ சுகமோர்
தொடையின் நொய்திற் 55
செலவெய்தான்.
512 வெய்தாம் அயில்வா
ளிகள்உக் கிரன்மேல்
விறல்சோ¢ அதிசூரன்
எய்தான் அதுமற்
றவன்மேற் படவே
எருவைப் பெருநீத்தம்
எய்தான் முழுதும்

பெருகுற் றிடலும்
விழுமத் தொடுசெற்றஞ்
செய்தான் ஒருமால்
வரைகொண் டவுணன்
தேர்மேற் 56
செலவுய்த்தான்.

513 அதிர்பொற் கழலான்
விடுதிண் கிரியால்
அதிசூ ரன்மான்தேர்
பிதிர்பட் டிடலும்
புவிமேற் படர்தல்
பிழையா மெனவுன்னா
உதயக் கிரிபோற்
கனகத் தியலும்
ஒருதேர் மிசைநீலக்
கதிருற் றெனவே
கடிதிற் பாய்ந்தான்

காலன் மிடல்தீர்ப்பான். 57

514 வேறு

பாயும் வேலைஅப்

பல்மணித் தேரினை

ஏய ஆற்றல்கொண்

டீர்த்திடும் வாசிகள்

மாயும் வண்ணம

றம்புரி உக்கிரன்

சீய மாமெனச்

சென்றுதைத் தானரோ. 58

515 உதைக்க வெய்யவன்

ஒண்பரி பாரிடைப்

பதைத்து வீழ்தலும்

பையுளின் மாழ்கியே

சிதைப்பன் இந்தச்

சிறியனை என்றுமெய்

புதைப்ப நூறு

பொருசரந்
தூண்டினான். 59

516 தூண்டு கின்றி
சுடர்க்கணை
யாவையும்
ஈண்டி யேதன்
எதிருறும் பெற்றியைக்
காண்ட லுங்கதை
கைக்கொடவ் வுக்கிரன்
மீண்டி டும்படி வீசிநின்
றார்க்கவே. 60

517 வேறொர் தேரிடை
வெய்தென எய்தியே
ஊறு நீங்கிய உக்கிரற்
கண்ணுறீஇ
மாறி தெய்வத

மாப்படை தொட்டுனை
ஈறு காண்பன் 61
இறந்தனை நீயெனா.
518 முன்னு பூசை முதலிய
யாவையும்
முன்னி யேநின்
றொருங்குடன்
செய்தபின்
வன்னி மாப்படை
வாங்கி வணங்கியே
மின்னு தண்சுடர்
மீக்கொள வீசினான். 62
519 ஆசை தோறும்
அழல்சிந்த மாற்றலன்
வீசு வெம்படை
வீரத்தை நோக்கியே
ஈசன் மைந்தன்

இணைமலர்த்
தாள்களை
நேச மோடு
நினைந்தனன்
போற்றினான். 63
520 எவ்வெ வர்க்கும்
இறையவ னாகியோன்
அவ்வ ழித்தன்
அருள்செய உக்கிரன்
செவ்வி திற்செலுந்
தீச்சரம் பற்றியே
கவ்வி நுங்கினன்
கண்கனல் கான்றிட. 64
521 நுங்கு வான்றனை
நோக்கி அரிமுகன்
துங்க மாமகன்
தொல்புனல் மாப்படை

பொங்கு சண்டப்
பொருபடை ஏவலும்
அங்க வற்றையும் பற்றி
அருந்தினான். 65

522 காற்றின் வெம்படை
ஏவினன் கைதவன்
ஆற்றல் உக்கிரன்
அன்னது நுங்கினான்
தேற்று கின்றுழிச்
செய்தவம் அன்றியே
ஏற்ற மான
இரும்பொருள்
யாவதோ. 66

523 மற்றும் அவ்வதி சூரன்
மலரயன்
ஒற்றை வெம்படை

ஒச்சலும் உக்கிரன்
பற்றி நுங்கவப்
பங்கயன் தாதைபால்
பெற்றி ருந்த
பெரும்படை 67
ஏவினான்.
524 ஒய்யெ னச்சென்
றுருகெழு நாரணன்
பொய்யில் மாப்படை
போந்திட ஆங்கதுங்
கையில வாங்கிக்
கதுமென
வாய்க்கொளா
வெய்ய உக்கிரன்
மேயினன் என்பவே. 68
525 ஆன காலை அரிமுகன்
காதலன்

யானி னிச்செய்
இயற்கையென்
னேயிவன்
தானவ் வீசன்கொல்
கண்ணன்கொல் தாமரை
மேனி லாவிய
வேதன்கொ
லோவென்றான். 69

526 மூவ ராகிய மூர்த்திகள்
அல்லதை
ஏவ ரேமற் றிதுசெயும்
பெற்றியார்
ஆவ னாவன்
அவர்க்குள்
இவனெனாத்
தேவர் மாற்றலன்
பின்னருஞ்

செப்பினான். 70

527 சீற்றங் கொண்ட
அவுணர் திரைக்கடல்
தோற்றங் கொண்டசவ்
சூர்கெழும் உக்கிரன்
ஏற்றங் கண்டுழி
என்செய்தும் என்றனர்
கூற்றங் கொண்ட
உயிரிற் குலைந்துளார்.
71

528 அண்ணல் வாசவ
னாதிய ராகிய
எண்ணில் வானவர்
யாவரும் இச்செயல்
கண்ணு றாஇகல்
கண்டருள் நான்முகப்
பண்ண வன்முன்

பணிந்திது கூறுவார். 72

529 எங்க ளால்வரும்
எண்ணில் பெரும்படை
செங்க ணான்படை
தீயநின் மாப்படை
அங்கி யாவும்
அணுகஇப்
பூதா¢கோன்
நுங்கு மாறென்
நுவலுதி என்னவே. 73

530 இந்தி ராதியர்
கேண்மின்கள்
ஈங்கிவன்
அந்தி வான்சடை
அண்ணல் வரத்தினான்
கந்தன் எந்தை
கழலிணை போற்றியே

வந்து ளான்எவ்
வலியையும்
ஆற்றுவான். 74
531 எம்மை யாளுடை ஈசன்
அருள்பெறுஞ்
செம்மை யானவன்
செம்பொற் சிலம்படி
மும்மை யுந்தொழு
முத்திபெற் றான்இவன்
எம்மி னும்பெரி
யான்என்றும் ஈறிலான். 75
532 மைக்க ருங்கடல்
வண்ணன்முன் ஏவிய
சக்க ரம்நுக ருந்தவத்
தோனினும்
மிக்க ஆற்றலன்
வெற்றியின்

மேலையான்
உக்கி ரன்னென்
றுரைத்திடும்
பேரினான். 76

533 பண்டு நாமருள்
பல்படை யாவையும்
உண்ட தோவியப்
பொல்லையில
எல்லையில்
அண்ட முஞ்சிதைத்
தாக்குவன் ஈங்கிவன்
கொண்ட தொல்புகழ்
கூறத் தொலையுமோ. 77

534 என்ன நான்முகன்
எண்ணி இயம்பலும்
அன்ன கேட்டலும்
அண்டர்கள் யாவருந்

துன்னு சென்னி
துளக்கிப் பெருந்திறல்
இன்னு மாக
இவற்கென்
றியம்பினார். 78

535 வேறு
வான மேலிது
நிகழ்ந்துழி மாறிலா
அவுணர்
சேனை காவலன்
பூதனை நோக்கிநிற்
சிதைப்பல்
ஊன மாகிய
படையென உன்னலை
உமைபால்
ஞான நாயகன்
படைதொடு வேனென

நவின்றான். 79

536 மந்தி ரந்தனிற் பூசனை
முதலிய வகுத்துச்
சிந்தை மேலுறு
வெள¤யோ டரன்படை
செலுத்த
அந்த மில்லதோர்
உலகெலாம்
முறுவலால் அடர்க்கும்
எந்தை கொண்டதோ
ருருவெனத் தோன்றிய
திமைப்பில்.
80

537 நஞ்சும் ஆரழல்
நாகமும் நடுவன
துருவும்
விஞ்சு பூதமுங்

கணங்களும் வேறுபல்
படையும்
எஞ்ச லில்லதோர்
அங்கியும் போற்ற
எவ்வுலகும்
அஞ்சி டும்படி
நடந்ததால் அரன்படை
யதுவே. 81
538 ஈசன் மாப்படை
வருதலும் உக்கிரன்
என்னும்
ஆசில் வீரன்றன்
அங்கையிற்
கதையினை அகற்றிப்
பாச நீக்குமஞ்
செழுத்தினை
விதிமுறை பன்னி

நேச மோடுகை
தொழுதரன் பொன்னடி 82
நினைந்தான்.
539 ஆண்டை உக்கிரன்
நிற்றலும் அஞ்சலி
புரிவான்
மாண்ட தொல்படை
இல்லவன் துதிசெயும்
வாயான்
ஈண்டி வன்றனை
அடுகிலன் யானென
எண்ணி
மீண்டு சென்றது
சிவனருள் படைக்கலம்
விரைவில். 83
540 அண்ண லம்படை
துறந்தவர் மேல்விடின்

அவர்பால்
நண்ணு றாதுநம்
பக்கல்வந் திடுமென
நல்க
விண்ணு லாம்புகழ்
அவுணர்கோன்
பெறுதலின் விடையூ£¢
பண்ண வன்றனை
அடைந்ததாங்
கவனருள் படையே. 84 16

541 ஆன பெற்றிகண்
டிங்கிவன்
சிவன்கொலென்
றயிர்த்துச்
சேனை காவலன்
துளங்கினன் பூதர்கள்
சிறந்தார்

வானு ளோர்மலர்
மாரிகள் தூர்த்தனர்
மாறாம்
ஏனை வீரர்கள்
விழிபொழி தாரைகாண்
றிரிந்தார். 85

542 நீங்கு கின்றதோர்
தானவர் குழுவினை
நீவிர்
ஏங்கு கின்றதை
விடுமின்கள் என்றுதேர்
இழிந்து
பாங்கர் உற்றதோர்
தண்டுகொண் டரிமுகன்
பாலன்
வீங்கு தோளிடை

எற்றினன் உக்கிரன் 86
வெகுண்டான்.
543 எற்று தண்டினை
அங்கையால் உக்கிரன்
என்போன்
பற்றி வாங்கியே
அவன்றன துரம்பதை
பதைப்பத்
தெற்றெ னப்புடைத்
திடுதலும் நிலனிடைச்
சேர்ந்தான்
மற்ற வன்றன
துயிர்கொடு போயினன்
மறலி. 87
544 துஞ்சி வீழ்அதி சூரனை
நோக்கியே துகடீர்
மஞ்சு போலவே

வரும்அசு ரேந்திரன்
மனமும்
நஞ்சு மாமெனக்
கொதித்தனன்
அழலெழு நகையா
விஞ்சு பூதர்தங்
குழுவின்மேற்
சென்றனன் விரைவின். 88
கடிது சென்றசு
ரேந்திரன் இந்திரன்
கரத்தின்
நெடிய வில்லினும்
ஆயிரத் திரட்டிமேல்
நிமிர்ந்த
கொடிய வார்சிலை
வாங்கியே
குணத்தொலி

கொளுவப்
படியும் வானமுங்
குலைந்தன உயிரெலாம்
பதைப்ப. 89

546 பூதர் அங்கது
நோக்கியே தண்டமும்
பொருப்பும்
பாத வங்களுந் தாரகன்
தந்திடு பதகன்
மீது சென்றிட
விடுத்தலும் அனையன
விலக்கிச்
சோதி வெங்கணை
இறுதிநாள் முகிலெனச்
சொரிந்தான். 90

547 வடிகொள் வார்ணை
விடுத்தலும் பூதர்கள்

வலிதின்
விடுபி றங்கலே
முதலிய இடையிடை
வீட்டி
முடியுங் கைகளும்
ஆகமும முகத்தொடு
மொய்ம்பும்
அடியுஞ் சோ£¤நீர்
கான்றிட அழுந்திய 91
அவர்பால்.
548 மற்றும் வெங்கணை
உலப்பில தூண்டலும்
மண்மேல்
அற்ற கைகளுந்
துணிந்திடு தோள்களும்
அடியும்
இற்ற கண்டமு

மாகிவெம் பூதர்கள்
இறப்பக்
கொற்ற வீரா¤ல்
கனகன்என் பவன்எதிர்
கொண்டான். 92

549 எதிர தாய்வரு
கனகன்மேல் தாரகன்
ஈந்த
அதிரும் வார்கழல்
அன்னலோ£¢
வடிக்கணை அழுத்த
உதிர வாரியோ
டன்னவன் தேர்மிசை
உற்றான்
கதிரின் மேல்வரு
செய்யகோ ளாமெனக்
கடிதின்.

93

550 பாகன் தன்னுயிர்
உலந்திட
உதைத்துவெம்
பனைக்கை
நாகந் தந்திடு
மதலைதன் வரிசிலை
நாணைக்
காகம் போலவெள்¢
ளெயிற்றினாற்
கீறிவெங் கறைசேர்
மேகந் தாரணி
மிசைஇழிந் தாலென
மீண்டான். 94
551 இழிந்து மால்வரை
ஒன்றுகீண் டசுரரிந்
தினாங்

கழிந்த சீர்த்தியான்
மீமிசை ஒச்சலுங்
கரத்தின்
அழிந்த வில்லினை
நீத்துவே றொருசிலை
அதனைக்
குழிந்த கண்ணுடைப்
பூதர்கள் வெருக்கொளக்
குனித்தான். 95

552 குனித்து நான்கிரு
சுடுசரந் தொடுத்தறை
கூவித்
தனித்து மேல்வருங்
கனகன்ஏ வியகிரி
சாய்த்துப்
புனிற்றி ளம்பிறை

செக்கர்வான்
நுழைந்தெனப்
புயங்கள்
பனித்தி டும்படி
அழுத்தினன் ஆயிரம்
பகழி. 96

553 பகழி ஆயிரம்
படுதலும் ஆடகன்
பையுள்
நிகழ நிற்றலும்
வேறொரு வலவனை
நிறுவிப்
புகழில் தானவன்
தேர்கொடு பூதர்மேற்
போத
அகழு மால்வரை
ஒன்றெறிந் துன்மத்தன்

ஆர்த்தான். 97

554 அவன்ள றிந்திடும்
பருப்பதம்
விரைவில்வந் தடர்க்கக்
கவன வெம்பரி யாயின
உலந்தன காணாப்
பவன வேகத்தின்
வேறொரு தேர்மிசைப்
பாய்ந்தான்
புவனம் உண்ணிய
நின்றதோர் கடவுள
போல்வான். 98

555 முந்து வெங்கணை
உலப்பில தூண்டலும்
முந்நீர்
செந்து கிர்க்கொடி
போர்த்தெனக் குருதிநீர்

செறிய
வந்த முற்றிலன்
புவிமிசை இருந்தனன்
ஆங்கே
மந்தன் என்பவன்
தாரகன் புதல்வன்றோ
வந்தான். 99

556 வருத லோடும்ஆங்
கவன்மிசை ஐயிரு
வாளி
குருதி காலுற
வழங்கலும் எரியெனக்
கொதியாய்
பரிதி மேவரத்
தகுவதோர் பருப்பதம்
பறித்துக்
கருதி ஏவினன்

அவுணர்கோன் அங்கது
கண்டான். 100

557 சென்று மார்பெதிர்
ஏற்றலும் வந்துழித்
தெறித்துக்
குன்று மீண்டுமற்
றவன்புடை போயது
கொடியோன்
ஒன்று போலிய
ஆயிரம் பகழிகள்
உய்த்தான்
நின்று மந்தன்
அங்கயர்ந்தனன்
சிங்கனும் நேர்ந்தான். 101

558 எடுத்து மால்வரை
ஒன்றவன் உரத்தின்நேர்

எறியத்
தடுத்தொர் வாளியின்
அகற்றினன் அமரிடைத்
தரியார்
விடுத்த தோர்கதை
எறிதலும் அவனது
விலக்கித்
தொடுத்து நூறுகோல்
அழுத்தினன் சிங்கனும் 102
தொலைந்தான்.

559 ஒழிந்த சாரதத்
தலைவர்க ளியாவரும்
உடன்றே
அழிந்து நின்றனர்
தாரகன் குமரன்ஆ
சுகங்கள்
பொழிந்து மற்றுள

பூதரை முடித்திடும்
போதில்
கழிந்த துன்பொடும்
இலக்கரில் தண்டகன்
கண்டான். 103

தனது கார்முகம்
வாங்கியே தண்டகப்
பெயரோன்
முனையி ருங்கணை
ஆயிரங் கொடியவன
முகத்தின்
நனிபு குந்திட
விடுத்தலும் நடலையுற்
றிரங்கி
மனமமெவ குண்டுபின்
தன்பெருஞ்
சிலையினை

வளைத்தான். 104

561 வளைத்து நாலிரண்
டம்பினைத் தண்டக
மறவோன்
குளத்தின் மேற்பட
விடுத்தலும் எழுந்தன
குருதி
இளைத்து நின்றனன்
தேர்மிசை அன்னவற்
கிளையோன்
கிளத்து சோமுகன்
தாரகன் மகன்எதிர்
கிடைத்தான். 105

562 எதிர்பு குந்தவன்
அகலமேல் ஐம்பதிற்
றிரட்டி

கதிர்தெ றுங்கணை
அவுணர்கோன்
அழுத்தலுங் கவலா
அதிர்த ருந்தன
தொண்சிலை வாங்கியா
யிரமாம்
நுதிகொள் வெஞ்சரந்
தூண்டினன் சோமுகன் 106
நொடிப்பில்.
563 பல்ல வங்களா
யிரமும்அத் தாரகன்
பாலன்
சில்லி யந்தனித்
தேரினை வலவனைச்
சிதைப்ப
மெல்ல வேறொரு
தேர்மிசைப்

பாய்ந்துவேல் ஒன்றை
ஒல்லை இங்கிவன்
உயிரினை உண்கென
உய்த்தான். 107

564 உய்த்த வேல்அவன்
அகலமேற் படுதலும்
முயங்கி
எய்த்து மற்றவன்
தேர்மிசை மயங்கினன்
இருப்ப
நித்தன் வேர்வுறு
சோமுகற் கிளையவன்
நெடுமால்
ஒத்த வன்மையன்
விசயன்என் பவன்கடி
துற்றான். 108

565 விசயன் ஆங்கொரு
கொடுமரம் வாங்கியே
வெகுண்டு
நிசித வெங்கணை
ஆயிரம் உய்த்துநே
ரில்லா
அசுரர் இந்திரன்
வலவனைத் தடிந்துமற்
றவன்கை
இசையும் வில்லொடு
நாரியைத் துணிபட 109
இறுத்தான்.
566 முற்று நூலுணர்
பாகுயிர் உலத்தலும்
முனியா
இற்ற நாணொடு
வார்சிலை துணியினை

ஏந்திக்
கொற்ற மார்அசு
ரேந்திரன் மத்திகை
கொண்டு
பொற்றை அன்னதன்
தேர்விடு வலவனின்
பொலிந்தான். 110

567 தகுவர் கோன்ஒரு
வலவனை நிறுவியோர்
தண்டம்
இகலும் வன்மையால்
எடுத்தனன்
அவன்மிசை எறியப்
புகுது மெல்லையில்
கண்டெதிர் விசயனாம்
புகழோன்
மிகவும் எல்லையில்

சரங்களைத் தூண்டினன் 111
விடுத்தான்.
568 தொட்ட தொட்டன
கணையெலாந்
துகள்படத் தொலைத்து
மட்டு லாந்தொடை
விசயன்மார் பகத்திடை
வந்து
பட்ட காலையில்
அவன்றன திரதமேற்
பதைத்து
விட்ட வில்லொடு
குருதியுந் தானுமாய்
வீழ்ந்தான். 112
569 விழுந்த காலையில்
இலக்கரில் ஏனையோர்
வெகுண்டு

பொழிந்த வாளியால்
தாரகன் மகனொடு
பொருதே
அழிந்தி யாவரும்
இரிந்தனர் போதலும்
அதுகண்
டுழந்த துன்பொடு
வீரமொய்ம்
பினன்விரைந் துற்றான். 113
570 வீர வாகுவேள்
இணையடி போற்றியே
வெகுண்டோர்
கோர வெஞ்சிலை
வாங்கினன் நாணாலி
கொளுவி
யாரும் வானவர்
வியபபுற அவுணர்கள்

அயரத்
தார காசுரன் மதலையை
மறைத்தனன் சரத்தால். 114
571 மறைப்ப மெய்யெலாங்
குருதிகொண்
டிடலும்வல் லவுணன்
றிற்க டுஞ்சிலை
ஒன்றினை
வளைத்தவன் மிசையே
பிறைத்த லைக்கணை
ஆயிரம் அழுத்தினன்
பெரிதும்
உறைத்த செம்புனல்
இருவரும் இளங்கதிர்
ஒத்தார்.
115

571 தார கத்திற லான்மகன்

தூண்டியேழ் சரத்தால்
சூரர் இத்திறல்
அண்ணல்கைச்
சிலைதனைத் துணிப்ப
வீரன் மற்றொரு
கார்முகம் வாங்கியே
விடங்கால்
கூர யிற்கணை ஆயிரம் 116
விடுத்தனன் குறியால்.
573 ஏகும் வார்கணை
தாரகன் மகன்சிலை
இறுத்துப்
பாகன் ஆவியுண்
டிரதமோ டயங்களைப்
படுப்ப
வாகை இன்றியே
வேறொரு தேர்மிசை

வறியன்
போக லோடுமற்
றன்னது கண்டனர்
புலவோர். 117

574 வெருவ ரப்பொருந்
தாரகன் மதலையை
வீரன்
பொருது வெற்றிகொள்
வான்கொலாம்
இனியெனப் புகழ்ந்தார்
அரிய அற்புத
மோவவன் வென்றிடல்
அவுணன்
கா¤த ருஞ்சுதன்
சிம்புளின் சுதனிவன்
கழறின். 118

575 மாறொர் தேரிடைப்

பாய்ந்தவன் ஒருதனு
வளைத்து
நூறு கோல்விடுத்
தவன்இர தத்தினை
நூறச்
சீறி வானெழீஇ வீரவா
குப்பெயர்த் திறலோன்
ஆறு மாமுக
முதல்வனைப்
பரவிநின் றார்த்தான். 119

576 உறைக ழித்துவாள்
உருவியே உம்பரிற்
படர்ந்து
சிறைக ழித்திடும்
வரைபுரை
அவுணர்கோன்

தேர்மேல்
குறைக ழித்திடும்
பணிகவர் மதியெனக்
குப்புற்
றிறைக ழிக்குமுன்
அவன்றனைக்
கையிலொன் 120
றெறிந்தான்.

577 எறிந்த காலையில்
இற்றதோர் கைத்தலம்
இறலுங்
குறைந்த கையிடைச்
சலசல இழிவன குருதி
செறிந்த நீலவொண்
கிரிதனக் கொருபுடை
சென்றே
உறைந்த தோர்கரும்

பணியழல் மணியுமிழ்ந் 121
தொப்ப.
578 கைய றுத்தலுந் தாரகன்
தன்சுதன் கனன்று
மொய்யு டைக்கதை
ஒன்றெடுத் தவன்மிசை
மோத
ஒய்யெனத் *திறல்
மொய்ம்பினன்
வானெழுந் தொருதன்
செய்ய பொற்பதத்
துதைத்தனன் அங்கவன்
சிரத்தில்.
( * பா-ம் - திரள்.) 122
579 காமர் தாளினால்
உதைத்துவிண்
படர்தலுங் கண்டு

தூம மார்விழி யான்அசு
ரேந்திரன்
தொடர்ந்தோர்
சேம வாள்கொடு
வானெழ
மேலையோன் சீறி
ஏம நாந்தகத்
தால்அவன் தலையற
எறிந்தான். 123

எறிந்த சென்னியு
மியாக்கையும்
இப்பரின் வீழ்ந்து
மறிந்து மற்றவன்
மன்னுயிர் போயது
வான்மேற்
செறிந்த விண்ணவர்

ஆர்த்தனர் இன்னதோர்
செய்கை
அறிந்த தானவக்
கடலெலாம் ஓடின 124
அன்றே.

581 மக்க ளாயினர்
இருவரும் இறந்தது
மலைந்து
பக்க மேயின
தானைகள் இரிந்ததும்
பாராத்
தொக்க பேரழல் உலகட
எழுந்ததோற் றம்போல்
மிக்க சீற்றமேற்
கொண்டனன்
அண்டங்கள்
வென்றான்.

125

582 சீற்ற மேதகு காசிபன்
மதலைபோர் செய்யும்
ஆற்ற லார்தமை
அடுவனால்
விரைந்தென மதித்துக்
காற்றின் முந்துசெல்
தேரிடைக் கடிதுவந்
தெய்திக்
கூற்றின் வெம்பசி
தணிப்பகோர்
சிலையினைக்
குனித்தான். 126

583 வாணி போற்றிடு
சயமகள் வீரமா
மடந்தை

நீணி லைப்பட
வேறுசோ பானத்தின்
நெறிபோல்
பூண ளாவிய
பொன்னவாஞ்
சிலைதனிற் புணர்த்த
நாணின் ஓதையைக்
காட்டினன் அணிவிரல் 127
நகத்தால்.

584 கரங்கொள் வில்லொலி
கேட்டலும் பாரிடைக்
கணங்கள்
மரங்கள் சிந்தினர்
சிகரிகள் சிந்தினர்
மலையும்
உரங்கள் சிந்தினர்
வீரமுஞ் சிந்தினர்

உடலுஞ்
சிரங்க ளானவும்
பனித்திட ஓடினர் சிதறி. 128
585 யாண்டு மாகியே
இரிந்தனர் அல்லதிந்
நிலத்தில்
வீண்டு ளார்சிலர்
பதைத்துநின் றார்சிலர்
வீழ்ந்து
மாண்டு ளார்சிலர்
மயக்கமுற் றார்சிலர்
மற்றும்
ஆண்டு பன்னிரண்
டொழிந்தில
தவுணன்வில் அரவம். 129
586 வேதன் அஞ்சினன்
மால்முடி துளக்கினன்

விண்ணோர்
நாதன் அஞ்சினன்
மறலியும் அஞ்சினன்
நடுங்கிக்
கோதில் நல்லறம்
அஞ்சின ஐவகை
கொண்ட
பூதம் அஞ்சின
உயிர்த்தொகை
அஞ்சின பொருமி.

587 வஞ்சன் வார்சிலை
நாணொலி கேட்டலும்
மறத்தால்
விஞ்சு பூதமீ ராயிர
வெள¢ளமும் வெருவி
எஞ்சி யேயவண்
நின்றிடா தி£ந்துள

வென்றால்
அஞ்சு பூதங்கள்
அஞ்சுவ தற்புதத்
தனவோ. 131
588 சூரன் விற்பெரு
முழக்கினைக்
கேட்டலுந் துளங்கிப்
பாரி டத்தொகை
அழிதர அன்னது
பார்த்துப்
போரி யற்படைத்
தலைவர்நூற்
றெண்மரும் புகுந்து
மாரி யிற்பொழந்
திட்டனர் வரைகளும்
மரமும். 132
589 அன்ன வேலையிற்

பத்துநூ றாயிர கோடி
பொன்னின்
வெங்கணை
அவுணர்கோன்
முறைமுறை போக்கித்
தன்னு ழைப்புகும்
வரையொடு
தருக்களைத் தடிந்து
துன்னு பாரிடத்
தலைவர்தம்
யாக்கையைத்
துளைத்தான். 133
5901 முடிது ளைத்தனன்
முகத்தினைத்
துளைத்தனன்
மொய்ம்பைத்
தொடையல்

மார்பினைத்
துளைத்தனன்
பாணியைத்
துளைத்தனன்
கடிது ளைத்தனன்
குறங்கினைத்
துளைத்தனன் கழல்சேர்
அடிது ளைத்தனன்
பாரிடத் தலைவரும்
அயர்ந்தார். 134

591 துளைத்து மெய்யினை
வெஞ்சரம் போதலுந்
துயர்கொண்
டிளைத்து நின்றனன்
அதிபலன் வக்கிரன்
என்போன்
களைத்து வீழ்ந்தனன்

வச்சிரன் இரங்கினன்
கபாலி
உளத்தின் வன்மைய
தழிந்தனன் உன்மத்தன்
உலைந்தான். 135
592 நீடு குன்றினை
யேந்தியே அச்சுதன்
நின்றான்
ஓடு கின்றிலன்
எதிர்ந்திலன் மாபலன்
உளைந்தான்
வாடு கின்றனன்
மதிசயன் மேகனும்
மருண்டான்
ஆடு றுந்துயர்
அறிந்தனன் அண்டவா
பரணன். 136

593 மேக மாலிஉ
நடுங்கினன் சுப்பிரன்
மெலிந்தான்
காக பாதன்மெய்
பதைத்தனன் உதவகன்
கவன்றான்
ஆகம வீழ்ந்திடு
குருதியுள் அழுந்தினன்
அசலன்
மாக வந்தன்நொந்
திரங்கினன் அத்திரி
மறிந்தான். 137

594 பத்தி ரன்சிறி
திடைந்தனன்
உடைந்தனன் பதுமன்
எய்த்த சைந்தனன்

வியாக்கிரன்
தனஞ்சயன் இரிந்தான்
மத்தன் வைதுவெய்
துயிர்த்தனன்
பினாகிமெய் மறந்தான்
சித்தி ராங்கனுங்
கனகனுந் துயர்க்கடல் 138
திளைத்தார்.
595 நெஞ்ச ழிந்தனர்
மாலியும் நீலனும்
நெடுங்கண்
பஞ்ச டைந்தனர்
கும்பனும் நிகும்பனும்
பதைப்புற்
றஞ்சி ஏங்கினர்
சண்டியுந் தண்டியும்
ஆவி

துஞ்சல் கூடினர்
வாமனுஞ் சோமன்என் 139
பவனும்.

596 வெங்கண் உக்கிரன்
எழுவதற் குரனிலன்
வெகுண்டான்
சிங்கன் ஒய்ந்தனன்
சுவேதசீ ரிடன்மறந்
தீர்ந்தான்
சங்க பாலன்வீழ்ந்
துருண்டனன் நந்தியுஞ்
சலித்தான்
பிங்க லன்உயிர்க்
கின்றிலன் உரோமசன்
பெயர்ந்தான்.
140

597 இனைய தன்மையால்

இவர்முத லானநூற்
றெண்மர்
அனிக வேந்தர்கள்
போர்வலி இன்றியே
அழியத்
துனைய மற்றது
கண்டுநூ றாயிரத்
தொகையோர்
கனையும் வார்சிலை
வாங்கியே தூர்த்தனர்
கணைகள். 141

598 தூர்த்து மற்றவர்
மாறுகொண் டிடுவுழச்
சூரன்
வேர்த்து வெங்கணை
மாரிதூய் அனையன
விலக்கி

ஆர்த்து வெஞ்சரம்
ஆயிர கோடிதொட்
டங்கண்
மூர்த்தம் ஒன்றினில்
அனையவர்
சிலைகளை முரித்தான். 142

599 முரித்து மற்றவர்
வார்சிலை யெடுப்பதன்
முன்னம்
திரித்தும் ஆயிர
கோடிவெங்
கணையினைச்
செலுத்திப்
பரித்தி றம்பல
பூண்டிடுந் தேர்களைப்
படுத்தி
உரத்தில் அன்னவர்க்

கிலக்கமா யிரங்கணை
உய்த்தான். 143

600 உய்த்த வாளிகள்
நெஞ்சுபோழ்ந்
திடுதலும் உளைந்தே
எய்த்து வீழ்ந்தனர்
இலக்கரும்
அனையகண் டிரங்கி
வித்த கங்கெழு
வீரமார்த் தாண்டனாம்
விடலை
கைத்த லங்கெழு
சிலையொடு
நேர்ந்தனன் கடிதின். 144

601 வாங்கு வில்லினன்
எறிந்தநாண்

ஒலியன்வார் கடல்கள்
ஏங்கும் ஆர்ப்பினன்
அவுணன்மேற்
கணையெனும் எழிலி
தூங்கு வித்தலுஞ்
சரங்கள்தூய்
அன்னவை
தொலைத்துத்
தீங்க டுங்கணை
ஆயிரம் நுதலிடைச் 145
செறித்தான்.

602 செறித்த காலையில்
வீரருள் வெய்யவன்
செயிர்த்து
மறித்தும் வெஞ்சரந்
தூண்டவே ஆயிரம்
வாளி

குறித்து வீசியே
அவன்விடு
கணையொடுங்
குனிவில்
அறுத்து ரம்பிளந்
தம்புபெய் தூணியும்
அட்டான். 146
603 அட்ட காலையில்
வீரமார்த் தாண்டன்உள்
ளழுங்கிப்
பட்டு ளானென
வீழ்ந்தனன் பரிசது
நோக்கி
ஒட்ட லான்வலி
அடக்குவன் யானென
உருத்து
விட்ட தேரொடும்

வந்தனன் அரக்கனாம் 147
விறலோன்.

604 வந்த வீரராக்
கதனெனும் நாமத்து
வலியோன்
கொந்து லாந்தொடை
தூங்குதன் கொடுமரங்
குனியா
ஐந்து நூற்றிரண்
டடுசரந் துரந்திட
அதுகால்
உந்தி ஆர்த்தனன்
அவுணர்கோன்
ஒராயிரங் கணைகள். 148

605 முட்டு வெங்கணை
வீரராக் கதனெனும்

மொய்ம்பன்
தொட்ட வாளியை
விலக்கிஅங்
கவன்சிலை துணிக்க
நெட்டி ருஞ்சுடர்
வாளமொன் றேந்திநீள்
விசும்பில்
எட்டு மாதிரக் கரிகளும்
வெருவஆர்த் 149
தெழுந்தான்.
606 விண்ணெ ழுந்தவன்
அவுணர்கோன்
நின்றிடும் வியன்தேர்க்
கண்ணில் வாவியே
ஆங்கவன்
கொண்டகார் முகத்தைத்
துண்ணெ னச்சுடர்

நாந்தகத் தெறிதலுஞ்
சூரன்
வண்ண வார்சிலை
முடிந்தில தொடிந்தது
மணிவாள். 150

607 நெடிய வாட்படை
இற்றிட விறலுடை
நிருதன்
தொடையல் மார்பகத்
தெற்றுவான் முயறலுஞ்
சூரன்
படையி ழந்திடும்
வலியிலற் கொல்வது
பழியென்
றடியின் மேற்படுத்
தெறிந்தனன்
அண்டமேற் செல்ல. 151

608 அரக்கர் வீரனை
அவுணர்கோன்
எறிந்திட அலமந்
திரக்கம் எய்தியே
வீழந்தனன் புவிமிசை
இதுகண்
டுரக்க டுங்கணை
மாரிகள் ஒன்னலன்
தேரும்
கரக்க வீசிவந்
தேற்றனன் மகேந்திரன்
கடியோன். 152

609 சூரன் அங்கது
விலக்கியே
கணைமழை துரப்ப
வீரன் மற்றது சிந்தினன்

பகழிகள் வீசிச்
சாரி வட்டம தாய்வர
அவுணனுந் தக்கோன்
தேரை வட்டணை
வந்தனன் சிலீமுகஞ் 153
சிதறி.
610 திரியும் வட்டணை
முறையினாற் சரமழை
சிதறி
வருதி றத்தினால் ஐயம
தாவவர் வடிவை
ஒருதி றத்தருந்
தெள¤கிலர் உணர்ந்திட
அற்றோ
இருதி றத்தரும் வீரமா
மகேந்திரர் என்றால். 154
611 ஆள ரிக்குடன்

வந்தவன் அத்துணை
அழன்று
கோள ரிக்குடன்
வந்தவன் விடுசரங்
குறைத்துத்
தாளின் முப்பது மருமமீ
திருபது தடம்பொற்
றோளின் முப்பது
கணைவிடுத் தவன்வலி
தொலைத்தான். 155

612 வலிதொ லைந்தவன்
வீழ்தலும் மாக்களின்
தொகைமேல்
புலிய டைந்தென
அவுணர்கோன்
உரப்பினன் புகலும்
மெலிவில் ஆற்றலன்

வீரதீ ரன்னெனும்
வெய்யோன்
சிலைகு னிந்திடப்
பகழிவான் நிமிர்ந்திடச்
சென்றான்.
156

613 சென்ற வீரதீ ரன்விடு
கணையொடு சிலையை
ஒன்றொ ராயிரம்
வாளியால் வீட்டியே
உயர்ந்த
குன்ற மன்னதோர்
தேரையேழ்
கணையினால் குறைப்ப
நன்று நன்றெனாத்
தண்டமொன்
றெடுத்துமேல்

நடந்தான். 157
614 நடத்த லாகிய
எல்லையில் பகழியோர்
நான்கு
தொடுத்து மற்றவன்
ஏந்திய தண்டினைத்
துணித்துத்
தடத்த மார்பினும்
மொய்ம்பினும் ஏழிரு
சரங்கள்
விடுத்து மண்மிசை
வீட்டினன் யாரையும்
வென்றான். 158
615 ஆன காலையில் வீரமா
மகேசனாம் அடலோன்
கூனல் வில்லினால்
அரிதிவன் தன்வலி

கோடல்
மான மார்திறல்
மொய்ம்பற்கும்
எனமனம் வலியா
ஊனும் ஆவியும்
கவர்வதோர்
தெய்வவேல்
உய்த்தான். 159

616 வேல்வி டுத்துழிக்
கண்டவன்
வெஞ்சிலைக் குனித்துக்
கோல்வி டுத்தலும்
ஆயிரம் அன்னவை
குறைத்துச்
சூல்வி டுத்திடும்
எழிலிபால் மின்வரும்
தொடர்பின்

மால்வி டுத்திடா
அவுணன்மார் புற்றதவ்
வைவேல். 160

617 உற்ற தோரெ·கம்
நுண்டுக ளாகிவிண்
ணுலவிச்
சுற்று மாதிரஞ் சென்றது
சூரன்மேல் வீரன்
மற்றொர் தண்டினை
விடுத்திட எடுக்குமுன்
வல்லோர்
சொற்ற சாபத்தின்
முந்தும்ஏழ்
கணையினைத்
தொடுத்தான்.
161

618

ஏழெ னப்படும்
பகழயும் மகேசனாம்
ஏந்தல்
பாழி மொய்ம்பினைப்
பாழிய தாகவே படுத்த
வீழல் உற்றதங்
கவன்உடல்
உணர்ச்சிகள் வீந்த
சூழு கின்றதோர்
மன்னுயிர் அடைந்தது
துரியம். 162

619 மகேசன் என்பவன்
மயங்கலும் மற்றது
நோக்கிக்
ககேசன் மேல்வரும்
இராகுவின்
அவுணனைக் கனன்று

நகேசன்
மங்கையோடிகலிவேங்
கடகிரி நண்ணுங்
குகேசன் ஏவல்செய்
வீரகே சரியெதிர்
கொண்டான். 163
எதிர்பு குந்தவன்
வணக்கியே நாணொலி
யெறிந்த
துதிகொள் வார்சிலை
தன்னையேழ்
கணையினால் துணியா
அதிகு ரல்மணித்
தேரைநூ றம்பினால்
அறுத்து
நுதிநெ டுங்கணை
அழுத்தின் ஆயிர

நுதலின். 164

621 ஆயி ரங்கணை
நுதலிடை அழுத்தஅம்
புவியில்
பாய்த ருங்குரு
திப்பெரு நதியொடு
பாய்ந்து
சேயி ருங்குவ
டொன்றினைச்
செங்கையால் பறித்து
மாயை தந்திடு
மதலைமேல்
விடுத்தனன் மன்னோ. 165

622 எறித்த ருஞ்சுடா¢த்
தபனனுஞ் சேடனும்
இரங்கப்
பறித்தெ டுத்துமேல்

வீசிய பராரையங்
குன்றம்
வெறித்த ருந்தொடை
அவுணர்கோன்
விசிகமொன் றதனால்
அறுத்து மார்பினூ
றயிற்கணை
அழுத்தினன் அம்மா. 166
623 கரம்பு குந்திடுங்
குனிசிலை
உமிழ்ந்திடுங் கணைகள்
உரம்பு குந்திட வீரகே
சரிமனம் உளைந்து
பரம்பு குந்திடும்
அவுணர்கோன்
தேர்மிசைப் பாயா
வரம்பு குந்தகுன்

றன்னமார் பத்திடை
அடித்தான். 167
624 வடித்த விற்படை
அவுணர்கோன்
மருமத்தின் வலிதாய்
அடித்த காலையில்
வீரகே சரிதன தங்கை
வெடித்த
தாமெனக் கீண்டது
விண்டது சோரி
துடித்து யிர்ப்பொடு
தேரிடை மறிந்தனன்
துயரால். 168

625 வீர கோளரி
பதைத்துமான் தேரிடை
வீழச்

சூரன் மற்றிவற்
கொல்வது பழியெனச்
சூழா
ஓர்கை யால்அவன்
தனையெடுத் தச்சுதன்
உறங்கும
வாரி திக்கிடை
எறிந்தனன் விண்ணவர் 169
மருள.
626 பரந்த பாற்கடல்
எறிதலும் வீழ்ந்தவன்
பதைப்புற்
றரந்தை எய்தியே
எழுந்துவிண்
ணெறியின்மீண் டணுகி
முரிந்த தம்மினங்
கூடினன் அங்கதன்

முன்னம்
புரந்த ரப்பெய்£
வாகையான் ஏற்றெதிர்
புகுந்தான். 170

627 ஏற்றெ திர்ந்திடு வீரமா
புரந்தரன் என்பான்
ஆற்றல் வெங்கணை
சொரிந்துபோர்
செய்வனேல் அவற்றை
மாற்றி வென்றிடும்
என்னையும் இவனென
மதித்துக்
கூற்று வன்படை
தொட்டனன்
அவுணனைக் குறுக. 171

628 குறுகும் அப்படை

வரத்தினை நோக்கியே
கொடியோன்
முறுவல் செய்தனன்
ஆங்கதற் கெதிருற
முரணால்
உறுவ தோர்படை
தொட்டிலன் இகழ்ந்திட
உவன்மேல்
மறலி தன்படை
பட்டுமாய்ந் திட்டது 172
வரத்தால்.
629 தண்ட கன்படை
மாய்தலுஞ் சயங்கெழு
மகவான்
முண்ட கன்படை
எடுத்தனன்
தொடுப்பதன் முன்னம்

கண்ட கன்சிலை
வாங்கிநூ றாயிரங்
கணையை
விண்ட கன்பெரு
மார்பகந் திறந்திட
விடுத்தான். 173

நிறந்த ருஞ்சுடர்க்
கணைபுகுந் துரத்தினை
நெறியாத்
திறந்து போயின வீரமா
புரந்தரன் செங்கை
உறைந்த நான்முகப்
படையொடுஞ்
சோரிநீ£¢ உமிழ்ந்து
மறிந்து மாய்ந்தனன்
வந்தனன் வீரர்தம்
மறலி.

174

631 தீர ராந்திறல்
அவுணர்கள் பூதராஞ்
சிதைவார்
சூர ராஞ்சிலை
வல்லவர் நமரெலாந்
தொலையும்
நீர ராஞ்செருச்
செயலிது நன்றென
நிகழ்த்தி
வீர ராந்தகன் வந்தனன்
அந்தகன் வெருவ. 175

632 சார்ங்கம் அன்னதோ£¢
வலியதாய் மாமதன்
தனுவாம்
ஈர்ங்க ரும்பென
அரிபடு சிலைகுனித்

தேற்றுக்
கார்ங்க ரும்புய
லாமென நாணொலி
காட்டிக்
கூ£¢ங்கொ டுங்கணை
சிதறிநின் றார்ப்பிசை
கொண்டான். 176

633 ஆ£¢ப்பெ டுத்தலும்
அஞ்சினன் கதிரவன்
அங்கம்
வேர்ப்பெ டுத்தனர்
அமரர்கள் விஞ்சையர்
விண்டார்
சீர்ப்பெ டைக்குலம்
அலமரக் கின்னரஞ்
சிந்திப்
பார்ப்பெ டுத்திரி

கின்றன கேசரப்
பறவை. 177

634 ஆன காலையில் வீரரந்
தகன்விடும் அம்பின்
சோனை மாரியைக்
கணைகளால்
விலக்கியே சூரன்
ஊனும் ஆவியுங்
கவருமா யிரங்கணை
உய்ப்பத்
தானும் ஆயிரம்
பகழிதொட் டன்னதைத்
தடுத்தான். 178

635 தடுத்த காலையில்
அவுணர்கோன்

சினவிமுத் தலைசேர்
வடித்த வச்சிரச்
சிலீமுகம் ஆயிரம்
வல்லே
எடுத்து விட்டிட வீரரந்
தகன்றமக் கெதிரா
விடுத்த பல்லவம்
யாவையுஞ் சிந்தியே 179
விரைந்த.

636 விரைந்து போய்விறல்
அந்தகன் தேரினை
வீட்டிக்
கரந்த னிற்சிலை
ஒடித்துவீ ரத்தினைக்
கலக்கி
உரந்த னிற்புகுந்
துணர்வுண்டு சோரிநீர்

உகுத்துப்
புரந்த ரற்குளந்
துணுக்குறப் போயது
புறத்தில். 180

637 விறல்ப டைத்திடும்
அந்தகன் கணைபட
வீழ்¢ந்து
மறல்ப டைத்திட
ஆங்கது நோக்கியே
மனத்தின்
உறல்ப டைத்திடு
செற்றமும் மானமும்
உகைப்பத்
திறல்ப டைத்திடு
மொய்ம்பினான்
அவுணன்மேற்
சென்றான்.

638 அரிகள் அச்சுறும்
வீரவா குப்பெயர்
அறிஞன்
இரதம் ஊர்ந்துவந்
தேற்றலும் ஆங்கவன்
எழில்சோ
உருவ நோக்குறா
ஒற்றனாம் இவனென
உன்னிப்
பெரிது வெஞ்சினம்
எய்தியே
அவுணர்கோன் பேசும். 182

639 எமது வீரமா
மகேந்திரஞ் சாடிஎண்
ணில்லாத்
தமரை அட்டனை

தானைகள் அளப்பில
தடிந்தாய்
குமரர் தங்களைக்
கொன்றனை நின்னுயிர்
கொண்டே
அமரின் ஆற்றலை
இன்றொடே
முடிக்குவன் அம்மா. 183
பற்று பட்டிமை
பயிற்றியே
அமைச்சரின் பன்னி
ஒற்ற னாகியே
இன்னும்வந்
தாயெனின் உய்தி
மற்ற தேகடன்
வார்சிலை பிடித்தனை
மாண்டாய்

இற்றை வைகலோ
நின்னுயிர்க்
கிழைத்தநாள் என்றான். 184

641 தூதும் ஆகுவன்
அமைச்சனும் ஆகுவன்
துன்னார்
மீது வெஞ்சமர்
ஆற்றுவன் இன்னமும்
வேலோன்
ஓதி டும்பணி
யாவையுஞ் செய்குவன்
உலகில
ஏதும் வல்லன்யான்
வேண்டுபோ£¢
புரிதியால் என்றான்.
185

642 என்று வீரனோ

திடுதலும் எரிந்தன
நயனம்
தின்ற வாளெயி
றிதழினை உரோமங்கள்
சிலித்த
துன்று சீற்றமுள்
ளெழுந்தது சூரனாம்
அவுணன்
குன்ற மன்னவிற்
குனித்தனன் நாணொலி
கொண்டான். 186

643 சிலைப னித்திடக்
குனித்திடு காலையிற்
செம்பொன்
மலைப னித்தன பாரகம்
பனித்தன வானதோய்
அலைப னித்தன

அண்டமும் பனித்தன
அங்கண்
தலைப னித்தனன்
அரவினுக் கிறையவன்
தானும். 187

644 வேறு

அம்முறை வேலையில்
ஆடல்கொள
மொய்ம்பின்
செம்மல்த னாது
செழுங்கர முற்ற
மைம்மலி வார்சிலை
வன்மையின் வாங்கிக்
கொம்மென நாணொலி
கொண்டனன்
ஆர்த்தான். 188

645 ஆர்த்திடு பேரொலி
ஆங்கவன் வாங்குஞ்
சீர்த்தனு ஆர்ப்பொடு
சென்றிடு காலை
மூர்த்தம தொன்றினின்
முச்சக வைப்பும்
பேர்த்தென வேபெயர் 189
குற்றன அன்றே.

646 அங்கது காலையில்
ஆயிர கோடி
துங்கநெ டுங்கணை
தூர்த்தனன் ஆர்ப்பப்
புங்கவ னுக்கிளை
யான்புய லென்ன
வெங்கணை வீசி
விலக்கினன் நின்றான்.
190

647 விலக்கிய காலை
வெகுண்டிவன் ஆவி
கலக்குவன் என்று
கடுஞ்சரம் வெய்யோன்
இலக்கம் விடுத்திட
ஏந்தல் தடுத்தான்
கொலைக்கணை ஆயிர 191
கோடி தொடுத்தே.
648 வெற்றிகொள்
வான்பினும்
வெங்கணை கோடி
செற்றமொ டேசெறி
வித்திடு காலை
மற்றவை சிந்தினன்
வாளிகள் நூறு
நெற்றியில் விட்டனன்
நீள்புய வீரன். 192

649 அச்சுத னாம்அவு
ணன்குளம் எய்தி
மெய்ச்சரம் நூறும்
விளிந்துபின் விண்ட
வச்சிர மாகிய
மால்வரை ஒன்றின்
உச்சியின உற்றபொன்
ஊசிகள் என்ன. 193

650 நூறயில் வாளி
நுதற்கிடை சென்று
மூறில னாகி உறுந்திறல்
நோக்கி
ஆறுமு கேசன்
அயற்படை அல்லால்
ஈறுசெ யாதிவன்
யாக்கையை என்றான். 194

651 என்றிடும் வீரன்
இதற்பினும் வாளி
துன்றுபல் கோடி
சொரிந்திட
வெய்யோன்
வன்றிறல வெங்கணை
யாலவை மாற்றி
ஒன்றுடன் ஏழ்கணை 195
ஒண்புயம் உய்த்தான்.

652 அம்பிரு நான்கும்
அணைந்துடன் ஆடல்
மொய்ம்பினன்
மொய்ம்புற மூழ்கியுள்
ளூற்ற
செம்புனல் உண்டு
செழும்பிடர் போழ்ந்தே
உம்பர் வெருக்கொள

ஓடிய மாதோ. 196

653 ஓடிய வேலை
யுளைந்திடு நெஞ்சன்
ஆடல்கொள்
மொய்ம்பினன் அவ்வசு
ரேசன்
பாடுறு தேர்விடு
பாகர்தம் மெய்யில்
கோடிபல் கோடி
கொடுங்கணை
விட்டான். 197

654 அலகில் நெடுங்கணை
ஆகம் அழுந்த
வலவர்கள் ஆற்ற
வருந்தின ராகிப்
புலவொடு சோரி

புறத்தில் விளங்க
இலவம லர்ந்தென 198
யாரும் இருந்தார்.
655 அங்கது நோக்கி
அழன்றசு ரேசன்
செங்கணை ஐம்பது
தீயென ஓச்சி
வெங்கண் விறற்புயன்
மேதகு தேரைப்
பொங்குளை மாவொடு
பொள்ளென அட்டான். 199
656 அட்டிடு காலை
அடற்புயன் ஆங்கோர்
வட்டணை யாழிகொள்
வையம தேறி
நெட்டழல் வாயு
நெடும்படை தன்னைத்

தொட்டனன் ஆங்கது
சூரன் அறிந்தான். 200

657 வேறு
வீறாகிய அசுரர்கிறை
மிகமூரல் படைத்து
மாறாகவொர்
படைதொட்டிலன்
வரிவில்லொடு நிற்பர்
சூறாவளி
அழல்மாப்படை
சூரன்மிசை தாக்கி
ஊறாயின நூறாயிரம்
உதிராயின பிதிராய். 201

658 காற்றின்படை
கன்லின்படை
கண்டம்பல வாகக்

கூற்றின்படை
கதிரின்படை
கூடத்தொடுத் திடலுஞ்
சீற்றங்கெழு சூரன்மிசை
சென்றேயவை தாமும்
ஏற்றந்தனை
இழந்தேகடி 202
திறந்திட்டன அன்றே.
659 அருணன்படை
மறலிப்படை
அழிவெய்தலும்
அம்மை
சரணந்தனில்
வருசத்திகள்
தருமைந்தரில்
தலைவன்
வருணன்படை

நிருதிப்படை
மகவான்படை மூன்றும்
முரணங்கொடு
கொடியோன்உர
மொய்ம்பிற்புக
விடுத்தான். 203
660 ஏற்றவை
அவுணர்க்கிறை
இருதோளுரம் எய்தி
வீயுற்றன
அதுகாலையில்
வீரங்கெழு மொய்ம்பன்
மாயப்படை
அவுணப்படை
வல்லேசெல விடுப்பப்
போயப்படை
யவன்மெய்யிடை

புகுந்தேபொடி யான. 204

661 விண்ணோர்படை
இவையாவையும்
விளிவாதலும் வீரன்
நண்ணான்பெரு
விறல்கண்டனன்
நனிவிம்மித னாகி
மண்ணோடுயிர்த்
தொகையாவையும்
வகுத்தோன்படை
நளினக்
கண்ணோன்படை
யொடுகூட்டுபு
கடிதிற்செல விடுத்தான். 205

662 விடுக்குற்றிடும்
அயன்மால்படை

விரைந்தேசினம் வீங்கி
அடுக்குற்றிடும்
உருமுப்புகை
அழல்கால்பல படைகள்
மடுக்குற்றிடு
புணரித்தொகை
வகுத்தெவ்வகை யுலகு
நடுக்குற்றிட
அவுணற்கெதிர்
நடந்திட்டன மாதோ. 206
663 ஆண்டேவரும்
அயன்மால்படை
அவுணன்தட மார்பங்
கீண்டேகுதும்
என்றேஅவன்
கிளர்தான்அக லத்தின்
மூண்டேசின

மொடுதாக்கிய
முழுமாமணி வயிரச்
சேண்டோய்கிரி
துளைப்பான்முயல்
சிறைவண்டின 207
மெனவே.

664 மாயோன்படை
உலகந்தரு
மறையோன்படை
அவுணத்
தீயோனுரந்
தனிற்பாய்ந்து
திருத்தொல்வலி சிந்தி
மீயோங்கிய
அசுரேசரும்
விண்ணோர்களும்
நோக்கி

ஏயோவென
வசையெய்தி
இரிந்திட்டன அன்றே. 208

665 மீளுற்றவை
இரியுஞ்செயல்
விழிதீயுற நோக்கி
நீளுற்றிடு
திறல்மொய்ம்பினன்
நிமலன்வர முன்னிக்
கோளுற்றிடு
பெரும்விம்மிதங்
கொண்டுற்றிட
அண்டம்
ஆளுற்றிடும்
அவுணர்க்கிறை
நகைசெய்திவை
அறைவான்.

209

666 முத்தேவரின்
முதலாகிய மூவாமுதல்
வரத்தால்
எத்தேவர்கள்
படையுய்க்கினும்
எனைவெல்கில எந்தப்
புத்தேள்படை
விடினும்மெதிர்
பொரவேஒரு படையும்
உய்த்தேதடை
வினைசெய்கிலன்
அவற்றின்வலி
உணர்வேன்.

210

667 ஊனீத்திடு
தவிண்ணவர்

உலகம்புகழ்
அயன்மால்
தானீத்துள
படையென்னிடை
சார்கின்றதொர் தன்மை
மாநீத்தமெ லாமுண்டிடு
வடவைத்தழல்
அதனைத்
தேனீத்தொகை
தசையீதெனச் 211
சேருந்திறன் அன்றே.
668 தெரிந்திட்டனை
நீயோச்சிய
திறல்வெம்படை
என்பால்
புரிந்திட்டதொர்
வயமொன்றிலை

பொள்ளென்றும் மேவி
முரிந்திட்டன
மறிந்திட்டன
முடிந்திட்ன பொடிந்தே
எரிந்திட்டன
கரிந்திட்டன
இடைந்திட்டன
அல்லால். 212

669 வில்வன்மைகொள்
சரவன்மையும்
விண்ணோர்படைக்
கலத்தின்
பல்வன்மையும்
பிறவாகிய
படைவன்மையும்
இயல்பாம்
தொல்வன்மையுங்

கண்டேயுனைத்
தொலைவில்படை
ஒன்றால்
கொல்வன்எனக்
காலந்தெரி கூற்றாமென 213
நின்றேன்.
என்னாவசு
ரன்செப்பலும்
இளையோன்இனி
ஒன்றால்
ஒன்னார்களில்
தலைவன்வலி
உணர்வேனென
உன்னாத்
தொன்னாள்எயில்
மூன்றட்டருள்
தூயோன்படைக்

கலத்தை
மன்னாரருள்
புரிசிந்தனை
வழிபாட்டோடு 214
விடுத்தான்.
671 விடுங்காலையின்
இறைவன்படை
விடம்வெங்கனல்
அசனி
கொடுங்காலிருள்
கதிர்வெய்யவன்
கூற்றம்பல கூளி
தொடுங்கார்முகச்
சரமாரிகள் சூலம்புடை
சுற்ற
அடுங்காலமி
தெனவேநெடி

தார்த்துற்றதை யன்றே. 215
672 உறுகின்றதொர்
படைநோக்கினன்
உரமுற்றெனக்
குடைந்தே
இறுகின்றதொர்
படைமற்றல ஈசன்படை
ஈதால்
பெறுகின்ற
அப்படையாலிது
பிழைசெய்குவல்
என்னாச்
செறுகின்றதொ
ரவுணர்க்கிறை
சிவன்றொல்படை
எடுத்தான். 216
673 ஊறேற்றிடு

தன்சிந்தையின்
உறுபூசனை நிரப்பி
ஆறேற்றிடு
சடிலத்தவன்
அடல்மாப்படை
தொடுப்ப
நீறேற்றிடு
மொய்ம்பன்விடு
நிமலப்படை
எதிர்போய்
மாறேற்றமர்
புரிந்திட்டது
வையத்தவர் வெருவ. 217
674 வேறு
காண்டகு நுதல்விழிக்
கடவுள் மாப்படை
ஆண்டவை

இரண்டும்நின் றாடல்
ஆற்றியே
மாண்டிடும் உலகென
வானம் போற்றிட
மீண்டன ஒல்லையில்
விட்டு ளோர்கள்பால். 218

675 அன்னது நோக்கியே
அசுரர் மேலையோன்
இன்னவை கொல்லுனக்
கியன்ற வன்மைகள்
உன்னுயிர் இன்னினி
ஒழிப்பன் காண்கெனாத்
தன்னெடுஞ்
சிலைவளைஇச்
சரங்கள் சிந்தினான். 219

676 துன்புறு அடிக்கணை
சூரன் சிந்தலும்

தன்பெருஞ்
சிலையினைத் தானும்
வாங்கியே
முன்புற நெடுஞ்சரம்
முகிலின் தூவினான்
பொன்புனை
அலங்கலம் யுத்து
வள்ளலே. 220
677 அத்தகும் எல்லையில்
அவுணர் மன்னவன்
முத்தலை நெடுங்கணை
மூவைந் தேவியே
வித்தக மொய்ம்புடை
வீர வாகுவின்
கைத்தல வில்லினைக்
கண்ட மாக்கினான். 221
678 சிலையது துணிதலுஞ்

சீறி வீரனோர்
இலையுடை வேலினை
யெடுத்து வீசலுந்
தொவறு வரம்பெறு
சூரன் மார்பெனும்
மலையிடைக் குறுகியே
மற்ற திற்றதே. 222

679 இற்றுழி அவுணர்கள்
இறைவன் மாலயன்
மற்றுள கடவுளர்
வலியுங் கொள்வதோர்
கற்றையங் கதிர்மணிக்
கதையொன்
றோர்ச்சினான்
வெற்றிகொண் டுலவிய 223
வீர வாகுமேல்.

680 திண்மைகொள

ப·றலைச் சேடன்
பாங்குளார்
எண்மரோ
டொன்றியோர்
இயற்கைத் தாகியே
உண்மலி யார்ப்புடன்
ஒழுகிச் சென்றென
வண்மணி கறங்கிட
மணித்தண் டுற்றதே. 224

681 வெங்கதை வருதலும்
வீர வாகுவோர்
செங்கதை எதிருறச்
செலுத்தி நிற்றலும்
அங்கதை நீறுசெய்
தவன்றன் மார்பிடைத்
துங்கதை தன்னொடு
துண்ணென்

றெய்திற்றே. 225
682 மேக்குயர் பெருஞ்சின
வீர வாகுவின்
மாக்கிளர் அகலமேல்
வயிர மாக்கதை
தாக்கலும் விண்டது
தாரைச் செம்புணீர்
தேக்கிய நதிகளில்
திரைத்துச் சென்றதே. 226
683 ஆழ்ந்திடு சோரியன்
அவுணன் தண்டினால்
போழ்ந்திடு மார்பினன்
புகையும் நெஞ்சினன்
தாழந்திடும் விறலினன்
தளரும் யாக்கையன்
வீழ்ந்தனன் அமரர்கள்
வெருவி யோடவே.

227

684 ஆற்றலின் றாகியே
அண்ணல் வீழ்தலும்
மேற்றிகழ வலவனாம்
விசாலி என்பவன்
தேற்றுறு பான்மையைச்
சிந்தித் தோர்புடை
காற்றெனத் தேர்கொடு
கடிது போயினான். 228

685 போந்திடு காலையில்
புலம்பி வீழந்துளான்
மாய்ந்திடுஞ சரதமாம்
என்று மாறிலான்
ஆய்ந்தனன் சிலைனித்
தப்பு மாரிதூய்க்
காய்ந்தனன் சென்றனன்
கணத்தின் தானைமேல்.

686 பொன்றிடா
வரத்தினான் பூத
சேனைமேற்
சென்றனன் கணைமழை
சிதறிக் கோறலும்
நின்றவை இரிந்தன
நெடிய தீங்கதிர்
என்றினை அடைந்திடு
பனியின் ஈட்டம்போல். 230
687 தாக்கிகல் வீரருஞ்
சயங்கொள்
மொய்ம்பனும்
நீக்கமில் இராயிர நீத்தத்
தானையும்
ஊக்கிய வலியழிந்
துடைந்த தன்மையை

நோக்கினன் பன்னிரு
நோக்கங்
கொண்டுளான். 231

688 ஆண்டது வேலையில
ஆறு மாமுகன்
பாண்டிலந் தேர்மிசைப்
பாகை நோக்குறா
ஏண்டகு சூரன்மேல்
இரதம் ஒய்யெனத்
தூண்டுதி என்றனன்
சுரர்கள் போற்றவே. 232

689 வேறு
இணைஅறு முருகன்
இவ்வா றிசைத்தலும்
இனைய தோரா
உணர்வுறு பவனன்
என்னும் ஒருதனிப்

பாகன் நகர்
கணமணி செறிந்த
பொற்பிற் காமரு
கடவுட் டேரைத்
துணையறு சூரன்
முன்னர்த் துண்ணெனத்
தூண்டி உய்த்தான். 233

690 ஆயது காலை தன்னில்
அவுணர்கோன் அநந்த
கோடி
ஞாயிறு திரண்டொன்
றாகி ஞாலமேல்
இருளை ஓட்டிச்
சேயுயர் விசும்பை
நீங்கிச் செருநிலத் துற்ற
தென்னத்
தூயதோர் குமரன்

போரில் தோன்றிய
தோற்றங் கண்டான். 234

691 முண்டக மலர்ந்த தன்ன
மூவிரு முகமுங்
கண்ணுங்
குண்டல நிரையுஞ்
செம்பொன் மவுலியுங்
கோல மார்பும்
எண்டரு கரமீ ராறும்
இலங்கெழிற் படைகள்
யாவுந்
தண்டையுஞ் சிலம்பும்
ஆர்க்குஞ் சரணமுந்
தெரியக் கண்டான். 235

692 சூரெனும் அவுணர்
கோமான்

தொல்லைநாள் நோற்ற
வாறும்
பாரிடை முடிவின்
றாகிப் பல்லுகம் இருந்த
வாறும்
ஆரணம் அறிதல்
தேற்றா ஆறுமா
முகத்தெம் மையன்
பேரெழில் உருவம்
நோக்கிப் பெரும்பயன் 236
கோடற் கேயோ.
693 எஞ்சலில் அவுணர்
செம்மல் இங்ஙனம்
அமர தாற்றித்
துஞ்சிலென்
தொலைவுற் றாலென்
தூயவா லறிவின்

மிக்கோர்
நெஞ்சினும் அளத்தற்
கொண்ணா நிருமலக்
குமர மூர்த்தி
செஞ்சுடர் வடிவங்
கண்டு தீவினை நீங்கி
உய்ந்தான். 237

694 பூவுல கண்ட மெல்லாம்
புரந்திடுஞ் சூரன்
தன்னைத்
தீவினை யாளன்
என்றே செப்புவர்
சிறப்பின் மிக்க
மூவிரு முகத்து வள்ளல்
முன்னவர்வந் தெய்தப்
பெற்றான்
ஆவிவன் தவத்திற்

கன்றி அறத்திற்கும்
முதல்வன் அன்றோ. 238

695 இன்னமும் முனிவர்
தேவர் யாவரும்
இனையன் என்றே
உன்னருந் தலைமைத்
தாகும் ஒருதனிக்
குமரன் தன்னைத்
தன்னிரு விழியாற்
கண்டான் தானவர்க்
கிறைவன் என்றால்
அன்னவன் தவத்தின்
பேற்றை ஆரறிந்
துரைக்கற் பாலார். 239

696 பொருசமர்
விளைப்பான் போலப்
பொருக்கெனப் போந்து

சூரன்
இருவிழி தன்னிற்
காண்பான் எளிதுதன்
வடிவங் காட்டி
அருளது புரிந்தான்
என்னின் ஆதியங்
குமரன் மாயத்
திருவிளை யாடல்
யார்க்குந் தெரிகில
போலு மன்றே. 240

697 சிந்தையால் அறிதற்
கொண்ணாத் திருவுரு
விழியாற் கண்டு
முந்துதான் நின்ற சூரன்
முழுதுல கடுவான்
நின்றோன்
மைந்தனாம் இவனென்

றுன்னி மனத்தினில்
வெகுளி தூண்டக்
கந்தவேள் தன்னை
நோக்கி இனையன
கழறல் உற்றான். 241

698 வேறு
சேனை யாய்நினைச்
சூழந்தவர் செருவலி
அழிந்து
போன போனதோர்
மாதிரந் தெரிந்தில பூத
மான வீரரும்
அழிந்தனர்
சிலைத்தொழில் வல்ல
ஏனை யோர்களும்
என்னொடு பொருதனர்
இறந்தார்.

242

699 இற்ற நின்பெரும்
படைக்கெலாந்
தலைவனாய் என்பால்
ஒற்று வந்துள வீரனும்
பொதுயிர் ஒழிந்தான்
மற்று நீயொரு
பாலனோ என்னொடு
மலைந்து
கொற்றம் எய்துதி
நன்றுநன் றுன்னுளக்
குறிப்பு. 243

700 மேல தாகிய
நின்னுடைத் தாதையும்
விண்ணும்
ஞால மும்புரிந் துதவிய
நான்முகத் திறையும்

மாலும் வெஞ்சமர்
புரிதிறங் கருதிலர்
மற்றோர்
பாலன் வல்லைகொல்
என்னொடு
போர்த்தொழில் பயில. 244
701 முந்தை நாள்வலி
இல்லதோர் அடுக்கலும்
முன்யான்
தந்த செல்வத்தின்
மயங்கிய தாரகா
சுரனும்
புந்தி நீங்கிய
அவன்படைத்
தலைவரும் போல
மைந்த என்னையும்
நினைந்தனை

போலுநின் மனத்தில். 245

702 தேக்கு சீரினேன்
வரத்தியல் உன்னலை
சிதையா
ஆக்கம் உன்னலை
பெருமிடல் உன்னலை
அடலின்
வீக்கம் உன்னலை
படைத்திறம் உன்னலை
வெம்போர்
ஊக்கம் உன்னலை
சிறுவநீ பெருஞ்சமர்க்
குற்றாய். 246

703 கமல மேலுறை
பகவனும் மாயனுங்
ககனத்

தமரர் செம்மலும்
மாதிரக் கிழவரும்
அழுங்கச்
சிமைய மங்கையும்
இரங்குற என்னொரு
சிலையால்
இமையொ டுங்குமுன்
நின்வலி அழிக்குவன் 247
என்றான்.
704 வேறு
சூரனென் றுரைபெற்
றுள்ள தொல்லையோன்
இனைய தன்மை
வீரமுந் திறலுஞ் சீரும்
வெகுளியுங் கொண்டு
செப்ப
ஆரருள் உருவாய்

நின்ற ஆதியங் குமரன்
கேளா
மூரலுஞ் சிறிது தோன்ற
இத்திறம் மொழிய
லுற்றான். 248
705 வெற்றியும் உடையம்
ஆற்றல் மிகுதியும்
உடையம் மேன்மை
பற்றியும் உடையம்
எண்ணில் படைகளும்
உடையம் வீயாப்
பெற்றியும் உடையம்
தானைப் பெருங்கடல்
உடையம் என்று
மற்றினி அகந்தை
கொள்ளேல் மாற்றுதும்
வல்லை மன்னோ.

706 வரமிகு சிறப்பி னேமை
மழவிளங் குமரன்
கொல்லோ
பொருதுவென்
றிடுவான் வல்லன்
என்றுநின் புந்தி
கொண்டாய்
பொ◌துநீ மடவை
மாதோ பிரான்தனி
நெற்றி நாட்டத்
தொருசிறு பொறியே
அன்றோ உலகெலாம்
அடுவ தம்மா. 250

707 அறிவுடை முதியர்
என்றும் ஆண்டினை
யோர்கள் என்றுஞ்

சிறியவர் பெரியர்
என்றும் திருத்தகு
வளத்தர் என்றும்
வறியவர் என்றும் வீரர்
மதிக்கிலர் யாவ ரேனும்
விறல்வலி படைத்து
நேரின் வெஞ்சமர் 251
விளைப்பர் அன்றே.

708 நூற்றுடன் எட்ட
தென்ன நுவலுறும்
உகத்தின் காறும்
பேற்றுடன் இனிது
வைகும் பெரியநின்
வலியை இன்னே
தேற்றம துறாத
கொள்கைச் சிறியநம்
வன்மை தன்னால்

ஊற்றுடைப் பாலிற்
புக்க உறையென 252
அடுதும் என்றான்.
709 வேறு
என்னு முன்வெகுண்
டவுணர்கோன்
இருநிலந் தன்னை
முன்ன ளந்தவன் போல்
அண்ட முகடுதோய்
வுற்ற
கொன்னெ டுஞ்சிலை
ஒன்றினைக் கரத்தொடு
குனிப்ப
அன்ன பான்மையைக்
கண்டனன் ஆதியங்
குமரன்.
253

710 மால யன்சுரர் பல்லியம்
இயம்பிவாழ்த் தெடுப்ப
ஆல மார்வனத்
தெம்பிரான் ஆடிய
அந்நாள்
மேலை மூதண்ட
முகடுற எடுத்ததோர்
வியன்தாட்
கோலம் என்னஓர்
நெடுஞ்சிலை
யெடுத்தனன் குமரன். 254

711 அடற்பெ ருந்திறல்
சண்டிதன் பெருமிதம்
அடக்கிப்
படித்த லந்தனை
அருளுவான்
ஆடல்செய் பரமன்

எடுத்த சேவடி
பகிரண்டம் அட்டிட
இயல்பால்
தடுத்த செங்கைபோல்
குனித்தனன் அறுமுகன்
தனுவை. 255

712 குனித்த வில்லிடைக்
குமரவேள் நாணொலி
கொண்டான்
அனைத்தும்
அண்டங்கள்
உடைந்தபோ்
ஓதைபோல் அவுணன்
சினத்து மாறுதன்
குணத்திசை எடுத்தனன்
செகத்தில்
பனித்த டங்கடல்

யாவுமார்த்
துடைந்திடும் பரிசின். 256

713 அள்ளி லைப்படை
அவுணர்கோன் அடுசர
மழைதூய்
வள்ளல் தன்னையுந்
தேரையும் உலகையும்
மறைப்பத்
தெள்ளி திங்கிவன்
விஞ்சையென்
றெந்தைசிந் தித்துக்
கொள்ளை வெங்கணை
துரந்தவை யாவையுங்
குறைத்தான். 257

714 குறைத்த காலையில்
சினவியே பின்னருங்

கொடுநஞ்
சுறைத்த பொற்கணை
பலதொட வாளிகள்
ஒச்சி
அறுத்து மற்றவை
குமரவேள்
அவுணர்கோன் தன்னை
மறைத்து விண்ணெறி
மாற்றினன் பகழிமா
மழையால். 258
715 ஆன பான்மைசேர்
பகழியின் படலிகை
அவுணன்
சோனை வாளியால்
துணித்திடை வீட்டியே
சுரர்தஞ்
சேனை காவலற்

கண்டனன்
வினைத்தனை சிந்தி
ஞான நாயகத்
தாணுவைக் காணுநற்
றவர்போல். 259
716 கண்டு தீயவன் பத்துநூ
றாயிரங் கணைகள்
அண்ட நாயகன்
குமரன்மேல்
விடுத்தலும் அவற்றை
எண்ட ருஞ்சர
மாரியால் விலக்கியீ
ரேழு
புண்ட ருங்கணை
உய்த்தனன் ஆங்கவன்
புயமேல். 260
717 கயப்பொ ருப்பினை

உரித்தமால் வரைதரு
காளை
வயப்பொ ருப்ப்பினை
அடுகணை சூரனாம்
வலியோன்
புயப்பொ ருப்பினை
எய்தியே துளைத்தில
புரைதீர்
அயப்பொ ருப்பையுற்
றடல்பெறா அழலவன்
கதிர்போல். 261

718 மாயை தன்மகன் வச்சிர
யாக்கையின் வலியை
நாய கன்திரு
மதலைகண் டழலெழ
நகைத்துத்
தீய வன்பினும்

விடுவதோர்
சரமெலாஞ் சிந்தி
ஆயி ரங்கணை
யால்அவன்
சிலையினை
அறுத்தான். 262

719 சிலையி னைத்துணித்
திடுதலும்
அவுணர்கோன்
செயிர்த்து
மலையி னைத்தடிந்
தவன்மிசை மலரயன்
தந்த
இலைய யிற்படை
ஒன்றினை எறிதலும்
ஈரேழ்
கொலையு டைக்கணை

தூண்டியே அன்னதைக்
குறைத்தான். 263
720 ஏறு சேவகத்
தவுணர்கோன்
அயிற்படை இறலும்
வேறொர் கார்முகம்
வாங்கினன் சரமழை
வீசி
மாறு மாறவன்
தொடுந்தொடுங்
கணையெலாம் மாற்றி
ஆறு மாமுகன்
புயத்திலேழ்
வாளிதொட் டார்த்தான். 264
721 செங்க திர்ப்பகை
தன்னைமுன்
உதவினான் செலுத்தும்

வெங்க ணைத்தொகை
பரஞ்சுடர் உருவமாம்
விமலன்
துங்க மிக்கதோள்
புக்குநுண் தூளிய
தாகிப்
பொங்க னற்றிரள்
பட்டதோர்
பூளைபோன் றனவால். 265

722 மொய்யி ருங்கணை
பட்டுநீ றாதலும்
முருகன்
வெய்ய சூர்வலி
நன்றுநன் றாலென
வெகுளா
ஐயி ரண்டுவான்
பகழியால் அவன்சிலை

அறுத்துச்
செய்ய தேரையும்
ஆயிரங் கணையினால்
சிதைத்தான். 266

723 ஆழி பூண்டிடும்
இரதமும் அங்கையிற்
சிலையும்
பூழி ஆதலும் அரசனுக்
கேமமாய்ப் போந்த
ஏழி ரண்டுநூ றாயிரந்
தேரையும் இமைப்பின்
ஊழி நாயகன் தன்சர
மழையினால்
ஒழித்தான். 267

724 சேம மாகியே நின்றிடு
தேரெலாஞ் செவ்வேள்
காமர் வாளியால்

சிதைத்தலும் அன்னது
கண்டான்
தூம வெங்கனல்
தூண்டிய விழியுடைச்
சூரன்
ஏம மாகியே
கொண்டிடு சூலமொன்
றெறிந்தான். 268

725 நண்ண லன்விடு
முத்தலைப்
படையைநாற்
கணையால்
பண்ண வன்திரு
மாமகன் இருதுணி
படுத்துத்
துண்ணெ னக்கணை
ஏழினால் அவன்குடை

துணியா
அண்ண லஞ்சுடர்
முடியையோர்
கணையினால்
அறுத்தான். 269

726 மணிப டுத்திய
மவுலியை அறுத்தபின்
வலியோன்
பணிப டுத்தமெய்
எங்கணும் பகழிகள்
போக்கி
அணிப டுத்தியே
புனைதரு மதாணிகள்
அனைத்தும்
துணிப டுத்தினன்
மறைகளுந் துணிந்திடற்
கரியோன். 270

727 ஆன காலையில்
சூரபன் மாவெனும்
அரசன்
மான வன்மையில்
குறைந்தது நோக்கிமா
டுள்ளே
சேனை காவலர்
நாற்படை தன்னொடுஞ்
சேர்ந்து
சோனை யாப்படை
வழங்கியே குமரனைச்
சூழ்ந்தார். 271
728 ஏழு நேமியும்
எறிந்துமே
ருவைவளைந் தென்னக்
கேழில் பல்படை
வீசியே ஆர்த்துடன்

கிளர்ந்து
சூழும் வெய்யவர்
தானையைக் கண்டனன்
தொன்னாட்
பூழி யாகவே
அவுணரூர் அட்டவன்
புதல்வன். 272
729 குருதி வேற்படை
கொண்டவன்
தன்புடைக் குழுமிப்
பொருதி றற்பெருந்
தானையைப்
பொள்ளென அடுவான்
கருதி யாங்கொரு
கரத்தினில் இருந்திடு
கடவுட்
பரிதி யம்படை

தொட்டனன் இரவியிற்
படர. 273

730 இலகும் வெய்யவன்
நடுவுநாள் யாமத்தின்
ஏகி
அலகில் பேரிருள்
அட்டென ஆழிபோய்
அவுணர்
தலையும் ஆகமுங்
கைகளும் அடிகளுந்
தடந்தோள்
மலையும் வீசிய
படைகளுந் துணித்தது
மன்னோ. 274

731 மேனி லாவிய
தேர்களைத்
துணித்திடும் வெங்கண்

மான யானைக
ளியாவையும்
துணித்திடும் வயமாத்
தானை யாவையும்
துணித்திடுஞ்
சமரினைத் தாங்குஞ்
சேனை காவலர்
யாரையும் துணித்திடுந்
திகிரி.
275

732 அரந்து ணித்தவாள்
அவுணர்கள் அடுசமர்
உன்னின்
உரந்து ணித்திடும்
இகழின்நாத்
துணித்திடும் உரப்பில்
சிரந்து ணித்திடும்

படைதொடு முயற்சிகள்
செய்யிற்
கரந்து ணித்திடும்
எதிர்ந்திடில்
துணித்திடுங் கழல்கள். 276
733 குடைது ணித்திடும்
கவரிகள் துணித்திடும்
கொடியின்
தொடைது ணித்திடும்
தேர்நிரை பூண்டமான்
தொகையின்
இடைது ணித்திடும்
அவுணர்தங் கரங்களின்
இருந்த
படைது ணித்திடும்
துணித்திடும் பல்லியத்
தொகையும். 277

734 கொற்ற மிக்கதோர்
கோல்கொடு
வலியுடைக் குலாலன்
சுற்றி விட்டிடு
திகிரியின் விரைவொடு
சுழன்று
பற்ற லார்பெருந்
தானையைப் ப·றுணி
படுத்தி
ஒற்றை நேமியம்
பெரும்படை
திரிந்ததால் உலவி. 278
735 போர ழிந்திடும்
அவுணர்தம் உடற்குறை
புகையாச்
சோரி வன்னியா
அதனிடைத்

துணிந்துவீழ் பரியும்
தேரும் யானையும்
அவிகளா எம்பிரான்
திகிரி
வீர மாமகம் ஒன்றியற்
றுவதென விளங்கும். 279
736 வெஞ்ச மாத்தொழில்
புரிதரும் அவுணரை
வீட்டி
வஞ்ச கத்தொடு
மாயமாம் பேரிருண்
மாற்றி
எஞ்ச லுற்றிடுங்
குருதியம் பெருநிறம்
எய்திச்
செஞ்சு டர்க்கதி
ராயதால் அறுமுகன்

திகிரி. 280

737 நச்சு தன்னிடத்
தமலையை இருத்திய
நம்பன்
இச்சு தன்தனி
ஆழிசென் றாடுறும்
இயல்பை
அச்சு தன்கரத் தேந்திய
நேமிகண் டதனை
மெச்சு தன்மையிற்
புகழ்ந்தது விம்மித
மேவி. 281

738 தீர்த்தன் உய்த்திடு
நேமியம் பெரும்படை
செருவில்
ஆர்த்த தானைநூ றாயிர
வெள்¢ளமு மடைய

மூர்த்தம் ஒன்றினில்
துணித்தது மூவிரு
முகத்தோன்
வார்த்தை யால்அவை
முழுவது மாற்றிய
வாபோல். 282

739 ஆடல் உற்றவேற்
பண்ணவன்
அலர்கதிர்ப் பரிதி
பாடு சுற்றிய
அவுணர்கோன்
தானையைப் படுத்து
மோடு பெற்றதொல்
புகழொடு மீண்டது
முளிபுற்
காடு முற்றவுந்
தனிபடர்ந் துண்டதோர்

கனல்போல். 283

740 கைம்ம லிந்திடு
குடைபல காம்பிடை
துணிந்து
மெய்ம்ம லிந்திடு
விழுநிணச் சேற்றிடை
வீழ்ந்து
பொம்மல் கொண்டுநிற்
புறுவன பூவலர்
தடத்திற்
செம்மல் கொண்டமர்
தாமரைக் காடுபோல்
திகழும். 284

741 அழுங்கல்
கொண்டதோர் கரிபரி
அவுணர்பேர் அனிகம்

வழங்கல் இன்றிவீழ்ந்
தவிந்திடு களேவரம்
மலிதல்
தழங்கு தெண்டிரை
உலகுள சயிலங்கள்
அனைத்தும்
ஒழுங்க தாகிவந்
தாயிடைத் தொக்கவா 285
றொப்ப.

742 அகல்வி சும்புகா
றொங்கிய களேவரம்
அதன்பால்
ஞெகிழி
கொண்டவாய்ப்
பேயின நிணனுண்டு
சிரித்து
மிகவும் ஆர்ப்பெடுத்

தீண்டுவ மின்னியே
இடித்து
முகிலி ருங்கணம்
முதுவரைச்
சாரல்மொய்த் 286
ததுபோல்.
743 மையல் யானையும்
அவுணர்த
மியாக்கையும் மற்றும்
ஒய்யெ னக்கொடு
குருதியம் பேரியா
றொழுகல்
செய்ய தோர்பணி
கருங்கடல்
மறைத்தல்சிந் தித்து
வெய்ய நஞ்சுமிழ்ந்
திருநிலம்

படர்தல்போல்
விளங்கும். 287

744 மாணி லைப்படு
பேய்சில களேவர
வரைபோய்ச்
சோணி தப்புனல்
ஆறுபாய்ந் திடஅதன்
துவலை
சேணி லத்துளார்
அரிவையர் புனைகலை
தெறிப்ப
நாணல் உற்றனர்
பூப்பென நகைப்பரென்
றுன்னி. 288

745 சொல்ல ருந்திறல்
அவுணரில் சிலர்தலை
துணிந்து

வல்லை யிற்கிளர்ந்
தார்த்தலும் வலியினால்
தம்மை
அல்லல் செய்திடு
கோளிரண் டல்லதை
அவைபோல்
எல்லை யில்லவை
வந்தளன் றிரியுமால் 289
இரவி.
746 நீடி விண்படர்
கொடிசில நிமிர்கவந்
தத்தின்
காடு தன்னிடைப்
புகுந்துதந் தலைமிசைக்
காட்டி
ஆடல் யானையின்
களேவரங் குத்துவ

அடுபோ
ரூடு காக்கையின்
முகரும்வந்
தார்கொலென் றுரைப்ப. 290

747 நீட லுற்றசீர்
அவுணர்கோன்
ஆணையால் நிலமேல்
வீட லுற்றிடு
வயவர்க்குத் தம்முயிர்
மீட்டுங்
கூட லுற்றிடு
திறனெனக் கூளிகை
கொட்ட
ஆட லுற்றிடும்
உடற்குறை அநந்தகோ
டிகளால். 291

748 இனைய வெல்லையில்

எம்பிரான் எரிகதிர்ப்
பரிதி
முனையில் வந்தடல்
செய்ததை
உணா¢ந்திலன்
முன்சூழ்
கனையி ருங்கடற்
படையெலாம் பட்டவா
கண்டு
மனம ருண்டொரு
தமியனாய் நின்றனன்
வலியோன். 292

749 நீண்ட தன்னொரு
வேற்படை உய்த்துநீக்
கினனோ
பாண்ட ரங்கம
தியற்றுவான்

படையின்வீட் டினனோ
மாண்டு போகவென்
றொருமொழி
தன்னின்மாற் றினனோ
ஈண்டு தானையை
முடித்ததெவ் வாறிவ 293
னென்றான்.
750 தேரி ழந்தனன்
சிலையதும் இழந்தனன்
திறல்சேர்
பேரி ழந்தனன்
தானைகள் இழந்தனன்
பெரும்பூண்
ஏரி ழந்தனன் மவுலியுங்
கவிகையும் இழந்தான்
பாரி ழந்திடு
மன்னர்போல்

நின்றனன் படிமேல். 294
751 நின்றி டுந்திறல்
அவுணர்கோன்
நெடுஞ்சினம் நெஞ்சில்
துன்ற மார்பகம்
வியர்த்திட முடித்தலை
துளக்கி
நன்று நன்றொரு
பாலகன் வலியென
நகையா
வென்றி நான்முகன்
படைக்கலம்
எடுத்துமேல்
விடுத்தான். 295
752 வேறு
சூர்ப்புயல் அன்னதொர்
சூரன் விடுக்கும்

மாற்படு போதன்
வயப்படை சென்று
பாற்படு மெல்லை
பரஞ்சுடர் செங்கை
வேற்படை சென்று
விழுங்கிய தன்றே. 296

753 விழுங்குதல் கண்டனன்
வெய்யவன் நெஞ்சம்
அழுங்குதல் செய்தனன்
அச்சுத மூர்த்தி
வழங்கிய தொல்லை
வயப்படை ஏந்தி
முழங்கழல் என்ன
முனிந்துடன் விட்டான். 297

754 விட்டிடு மாயவன்
வெம்படை ஏகி
மட்டறு கண்ணர்தம்

மாலுரு ஈன்று
கிட்டிய காலை
கிளர்ந்திடும் ஒள¢வேல்
அட்டது தன்னையும்
ஆர்ந்தது மன்னோ. 298

755 சயம்புனை செம்மல்
தனாதருள் நீரால்
அயன்படை தன்னுடன்
அம்புவி கேள்வன்
வியன்படை
தன்னையும் வேற்படை
உண்ணக்
கயம்படு சூரது
கண்டுவிம் முற்றான். 299
756 கறுத்திடு கின்றதொர்
கந்தர வள்ளல்

விறற்படை தன்னை
விடுத்திடின் யாரே
மறுத்திடு வார· தென்று
மனத்திற்
குறித்னன் மாயை
கொடுத்தருள் 300
கோமான்.

757 முப்புரம் நீறெழ மூரல்
விளைத்தோன்
மெய்ப்படை தன்னை
விடுப்பது தேற்றி
அப்படை ஏந்தி
அருச்சனை நீரால்
ஒப்பறு சீர்த்தியன்
ஒய்யென உய்த்தான். 301

758 அத்தகு வெம்படை
ஆடல் இயற்றும்

முத்தலை வேற்படை
மூர்த்திகள் கோலம்
எத்திசை தன்னினும்
ஈண்டுற ஆர்த்து
மெய்த்தழல் வீசி
விரைந்தது மாதோ. 302

759 ஆடியல் யானைக
ளாயின எட்டும்
வீடிய வேயென
வீழ்ந்தயர் வுற்ற
நீடிய நேமியின்
நின்றிடு செந்த
ஓடிய சேடனும் உட்கி
உலைந்தான். 303

760 படித்தலம் நெக்கது
பல்வகை மேகம்
இடித்தொகை சிந்தி

இரிந்தன பானுத்
துடித்தது திங்கள்
சுழன்றது மேரு
வெடித்த திடந்தொறும்
விண்டதிவ் வண்டம். 304

761 இலக்கர் நடுங்கினர்
ஏனைய வீரர்
கலக்க மடைந்தனர்
காண்டகு பூதர்
மலக்கம தெய்தினர்
மற்றிது தன்னை
விலக்கரி தாலென
ஓடினர் விண்ணோர். 305

762 புடவி முதற்புவ
னங்கள் அனைத்தும்
நொடிவரை

செல்லுமுன்
நொய்தென மாய
முடிவ தியற்றிடு
மூர்த்திதன் நாமப்
படைவர அன்னது
பா£¢த்தனன் வள்ளல். 306
763 எந்தைதன் மாப்படை
ஈதென ஐயன்
சிந்தை புரிந்தொரு
செங்கையை நீட்டி
வந்திடும் அப்படை
பற்றினன் மாதோ
தந்தவன் வாங்கிய
தன்மைய தென்ன. 307
764 பெற்ற முயர்த்த
பெருத்கை நாமக்
கொற்ற நெடும்படை

யைக்கும ரேசன்
பற்றியொர் பாணி
பரித்தனன் நின்றான்
மற்றது கண்டனன்
மாயவள் மைந்தன். 308

765 வேறு
விட்ட விட்டதோர்
படைக்கெலாம்
வேறுவே றொன்று
தொட்டி லான்அத
னாலது மாற்றுதல்
துணியான்
கிட்டும் எல்லையில்
அவையெலாங்
கவர்ந்தனன் கேடில்
அட்ட மூர்த்திசேய்

என்பது காட்டினன் 309
அம்மா.
766 என்னொ டேபொரற்
கிவனலால் வேறிலை
இனையோன்
தன்னொ டேபொரற்
கியானலா திலையிது
சரதம்
அன்ன பான்மையின்
எனக்குநே ராம்இவன்
அலது
பின்னை யாருளர்
தமியனுக் குவமையாப்
பேச. 310
767 மான வேற்படை
வன்மையும்
விற்றொழில் வலியும்

ஏனை யாயுள
வன்மையுங் கண்டனன்
இனிமேல்
பானல் வாய்மைந்தன்
செய்வது பார்ப்பனென்
றுன்னி
மோன மாகியே
நின்றனன் அவுணர்கள்
முதல்வன். 311

768 பொருளின் நீர்மையால்
புனைகலன் மாற்றலிற்
புவிமேல்
இருளின் நீ£மையாய்த்
தோன்றினோன் அற்புத
மெய்தி
மருளின் நீர்மையால்
நின்றது நோக்கியே

வள்ளல்
அருளின் நீர்மையால்
இனையன மாற்றங்கள்
அறைவான். 312

769 இந்தி ரன்தனி
மதலையை இமையவர்
தம்மை
அந்த மில்பகல்
சிறையிடைப்
படுத்தனை அதற்கா
முந்தொ ரொற்றனை
விடுத்தனம் ஆங்கவன்
மொழியுஞ்
சிந்தை கொண்டிலை
விடுத்திலை அமரர்தஞ்
சிறையும். 313

770 அன்ன தன்மையால்
ஈண்டியாம் வந்தனம்
அமரில்
தன்னை நேரிலா
திருந்திடு தாரகன்
தன்னை
முன்னம் அட்டிடு
முறையென
நின்னையும் முனிவால்
இன்ன வைகலே
அடுதுமென் றேகினம் 314
மீண்டும்.
771 ஈண்டு நின்புடை
ஈண்டிய
இலக்கம்வெள¢ ளத்து
நீண்ட தானையும்
நின்சிலை வன்மையும்

நின்னால்
தூண்டல் உற்றிடு
தெய்வதப் படைகளுந்
தொலைந்து
மாண்டு போயது
கண்டனை வறியனாய்
நின்றாய். 315

772 நெடிய தாரகற்
செற்றவேல் இருந்தது
நின்னை
அடுதல் இங்கொரு
பொருளுமன் றரிதுமற்
றன்றால்
படையி ழந்திடு
நின்னுயிர் உண்டிடில்
பழியாய்
முடியு மென்றுதாழ்க்

கின்றனம் தருமத்தின்
முறையால். 316

773 பன்னு கின்றதென்
பற்பல விண்ணுளோர்
பலரும்
துன்னு தொல்சிறை
விடுத்தியேல்
உன்னுயிர்
தொலையேம்
அன்ன தன்மையே
மறுத்திடின் ஒல்லைநாம்
அடுதும்
என்னை கொல்லுன
தெண்ணங்கள்
உரைத்தியால் என்றான். 317

774 வேறு வேறுநின்

றுலகெலாம் அளிப்பது
வெ·கி
ஆறு மாமுகம் பன்னிரு
செங்கைகொண்
டருள்வோன்
ஊறு சேர்அவு
ணன்றனக் கினையன
உரைப்ப
மாறொர் வாசகஞ்
சொற்றிலன் 318
உளத்திவை மதிப்பான்.
775 படையி ழந்தனன்
இவனென உன்னியே
பாலன்
இடைதெ ரிந்தனன்
போலவே இமையவர்
யாப்பை

விடுதி என்னவும்
வல்லனா யினன்விளி
வில்லேன்
அடலும் ஆற்றலுந்
தெரிந்திலன்
பிள்ளைமை யதனால். 319

776 மன்ற லந்தொடை
அறுமுகன் வரம்பிலா
வைகல்
நின்று பேரமர்
புரியநான் வறிதுநின்
றிடினுங்
கொன்றி டுந்தொழில்
வல்லனே தந்தைமுன்
கொடுக்க
என்றும் மாய்ந்திடா
ஒருவரம் பெற்றிடும்

என்னை. 320

777 தொழுத குந்திரு
மவுலியுங் கவிகையுந்
துணிய
இழிவ தாகியே
தமியன்நின் றமரியற்
றிடினும்
அழிவ தில்லையால்
ஆவது மிலைபுகழ்
அதனால்
பழிய தொன்றுறும்
அங்கது பாதுகாத் 321
திடுவேன்.

778 வேற்று நீர்த்தடங்
கொள்வதை
அன்றிவெள₵ ளங்கள்
ஊற்று நீர்ப்பெரும்

புணரியைக் கொள்வதற்
குறுமோ
ஏற்ற தானையைப்
படைகளைத்
தொலைப்பதே அன்றி
மாற்று மோவென
தழிவுறா வரத்தையும் 322
மைந்தன்.
779 என்னை அங்கவன்
முடித்திடல் அரியதா
லியானும்
அன்ன வன்றனை
இத்துணை வெல்வதும்
அனைத்தே
தொன்ன கர்ப்பெரு
வளத்தொடும்
படையொடுந் துன்னிப்

பின்னர் வந்தமர்
இயற்றியே பெருந்திறல்
பெறுவேன். 323

780 வசைய தன்றிது
செருச்செய்வோர்
பற்பகல் மலைந்து
விசையம் எய்தினும்
மேன்மையாம்
வியப்புமாம் மேலுந்
திசைவி ளங்குறு
புகழுமாம் யானுமிச்
செய்கை
இசைவ தேகடன்
அறிஞர்தஞ் சூழ்ச்சியும்
இ·தே.
324

781 என்று பற்பல

சூழ்ச்சிகள் மனத்திடை
எண்ணி
ஒன்றொர் மாயையின்
மந்திரந் தன்னையுள்
ளூறுத்தி
நின்ற மன்னவன்
ஒல்லையின்
மறைந்தவண் நீங்கிப்
பொன்றி கழ்ந்திடும்
மகேந்திரக் கோயிலுட் 325
போனான்.

782 மறைந்து போயசூர்
முயற்சியை மன்னுயிர்
தோறும்
உறைந்த நாயகன்
கண்டனன் ஒருதனிச்
செவ்வேல்

எறிந்து மற்றவன்
உயிர்கொள
நினைந்திலன் இன்னும்
மறிந்து தீயவன்
உய்யுமோ வெனுந்திரு
வருளால். 326

783 வேறு
ஆய வேலைதனில்
ஆறுமு கன்பால்
மாயனும் மயனும்
வானவர் கோவும்
ஏய தேவர்களும்
யாவரும் எய்தித்
தூய வந்தனை
யுடன்சொல லுற்றார். 327

784 என்று காசிபன்

இடந்தனில் வந்தான்
அன்று தான்முத லாவசு
ரேசன்
வென்றி யேகொடு
வியப்பொ டிருந்தான்
உன்ற னோடுபொரு
தோனன் இன்றே. 328

785 நீடு சூரனுடன் நீஅமர்
செய்தல்
ஆடலே அலதை
ஆங்கவன் ஆவி
கோடல் சிந்தையிடை
கொண்டலை என்னின்
ஒடுமோ பொருதும்
உய்திறம் உண்டோ. 329

786 துங்க முற்றுடைய

சூர்தனை வேலான்
மங்கு வித்திடுதி
மற்றதன் முன்னம்
அங்க வற்கெதிர்
அருஞ்சமர் ஆற்றல்
எங்கண் வைத்துடைய 330
இன்னருள் அன்றோ.

787 என்றி யம்புதலும்
எந்தை வினாவி
நன்று நன்றென
நகைத்தினி நம்முன்
சென்று நின்றுசமர்
செய்திடின் வல்லே
வென்று சூர்முதலை
வீட்டுது மென்றான். 331

788 ஆடல் சேரும்அவு
ணன்சமர் ஆற்றா

தோடி னாரும்உறு
கண்ணுள ராகி
வீடி னார்களௌள
வீழ்ந்தயர் வாரும்
கூடி னார்குமர
வேள்புடை வந்தார். 332

789 சங்க மாகியுறு சாரதர்
ஆனோர்
எங்கள் நாயகனை
எய்தி இகற்சூர்
மங்குல் வானிடை
மறைந்தது தேரா
அங்கண் ஞாலமலை
வுற்றிட ஆர்த்தார். 333

790 திகழ்ந்த பூதர்கள்
செருத்தனில் எம்மை

இகழ்ந்த சூ£¢நகரின்
இம்மதில் வீட்டி
அகழ்ந்து கோபுரம்
அகன்கட லிட்டு
மகிழ்ந்து மீண்டிடுதும் 334
வம்மின மென்றார்.

791 வம்மின் வம்மினென
வல்லைவி ளித்துத்
தம்மி னங்களொடு
சாரதர் மேலோர்
அம்ம கேந்திரம்
அழுங்குற ஆர்த்திட்
டிம்மெ னக்கடி
தெயிற்புறம் உற்றார். 335

792 உற்ற காலைதனில்
ஒண்மதில் காக்குங்
கொற்ற வீரன்அதி

கோரன் மருங்கிற்
சுற்று தானையொடு
சோர்விலன் நின்றான். 336
793 கண்டு ளான்நன
கனன்றிதழ் கவ்வித்
திண்டி பேரிதி
பிலைப்பறை ஆர்ப்பத்
தண்ட லின்றிஅமர்
தானைக ளோடு
மண்டு போர்புரிய
வந்தெதிர் புக்கான். 337
794 எதிர்பு குந்திடலும்
ஏற்றெதிர் சென்றார்
அதிர்பு குங்கழலின்
ஆடுறு பூதர்
பொதிர்பு குந்தவருள்
போந்துழி எண்ணில்

கதிர்பு
குந்தனையகாட்சி
படைத்தார். 338
795 தோம ரம்பரசு குலமொ
டெ•கம்
ஏம ருங்கதைகள்
ஏவினர் கோரன்
மாம ருங்கவுணர்
மற்றிவர் குன்றங்
காம ரம்படைக லந்து 339
விடுத்தார்.
796 எடுத்து வேழநிரை
எற்றினர் தேரை
ஒடித்தே றிந்தனர்
உகண்டுகள் பாய்மாப்
பிடித்தொர் கைகொடு
பிசைந்தனர் வீரர்

துடித்தி டும்படி
துகைத்தனர் பூதர். 340

797 எறிவர் பல்படையும்
எய்குவர் வெங்கோல்
குறிய ஈட்டிகொடு
குத்துவர் வாளால்
செறுநர் தங்களுடல்
சிந்துவர் இவ்வா
றறியும் வெஞ்சமரை
ஆற்றினர் தீயோர். 341

798 சோரி பொங்கின
சொரிந்தன மூளை
சாரு றுங்குடர் சரிந்தன
சேனங்
காரி பம்பின
கணங்களும் ஏனை
வீர ராம்அவுண

ரும்பலர் வீந்தார். 342
799 ஈடு றுஞ்சமர்
இழைத்துழி இவ்வா
றாடல் வெங்கணவர்
ஆற்ற முனிந்தே
சாடி வன்மையொடு
தாக்கலும் நில்லா
தோடி னார்அவுண
ராயுளர் முற்றும். 343
800 கோர மிக்கஅதி கோர
னெனும்பேர்
வீரன் மற்றதனை
நோக்கி வெகுண்டே
ஓரே ழுத்தனை
உரத்தொடு பற்றிச்
சார தப்படைஞர்
தம்மொடு நேர்ந்தான்.

344

801 தலைத னிற்கரத
லத்தினின் மொய்ம்பின்
மலையி னிற்பெரிய
மார்பின் முகத்தின்
ஒலிக ழற்கணம்
உலைந்திட மோதிக்
கொலைவி
ளைத்தொருவ னேகுல
வுற்றான். 345

802 ஈடி லாதொ
ரெழுப்படை பற்றா
ஓடி யோடிஉரு
முற்றென மோதி
வீடு றாதமர்
விளைத்திடு பூதர்
கோடி கோடியொ

ரிமைப்பிடை
கொன்றான். 346

803 இந்த வாறவன்
எழுக்கொடு தாக்க
முந்து தூசிமுரி வுற்றது
கண்டான்
கந்தன் ஏவல்செய்
கணப்படை மன்னன்
சிந்து மேகன்முனி
வோடெதிர் சென்றான். 347

804 சென்ற பூதரிறை
செங்கையில் வைகுங்
குன்றம் ஒன்றைஅதி
கோர னெனும்பேர்
வென்றி யான்மிசை
விடுத்தலும் நோக்கித்
தன்த டக்கையெழு

வால்தகர் வித்தான். 348
805 தகரும் எல்லைதரி
யார்கடல் வற்ற
முகிலின் உண்டிடு
முரட்பெயர் அண்ணல்
வெகுளி யோடவுணர்
வேந்தனை எய்தி
அகல மீதினில்
அடித்தனன் மாதோ. 349

806 அடித்த லோடும்அவு
ணர்க்கிறை யானோன்
இடுக்கண் எய்திஇவன்
ஆவியை இன்னே
முடிப்பன் என்றுமுச
லங்கொடு மொய்ம்பில்
புடைத்த னன்உருமு

வீழ்வது போல. 350
807 பூதன் மொய்ம்பிடை
புடைத்த எழுத்தான்
ஏதமா முரிய ஏற்றெதிர்
தெவ்வைக்
காது கைகொடு
கபோலம் அதன்கண்
மோத வேயவுணன்
ஆவி முடிந்தான். 351
808 வாய்தல் போற்றிய
வயப்படை வீரன்
சாத லுற்றுழி
தலைத்தலை ஆர்த்துப்
பூத சேனையா¢கள்
பொம்மென ஏகி
மூதெ யிற்றலை
முதற்கடை சென்றார். 352

809 ஆண்டி யோசனை
ஓராயிரம் வான்போய்
ஈண்டு செம்மணிக
ளால்இய லுற்று
மாண்ட தீயவட வாமுக
மேபோல்
நீண்ட தோர்சிகரி
நின்றது கண்டார். 353
810 கண்ட தோர்சிகரி
கைகொடு தொட்டுத்
தெண்டி ரைக்கடலின்
மேற்செல விட்டார்
மண்டு மேருவரை
யின்குவ டேந்திச்
சண்ட வாயுவிடு
தன்மைய தென்ன. 354

811 அன்ன வேலையில்
அலைந்தது ஞாலம்
பன்ன கேசனும்
மிகப்பட ருற்றான்
மன்னு சூருறை
மகேந்திர மூதூர்
துன்னு தானவர் 355
துளங்கி அயர்ந்தார்.
812 ஈண்டு பூதரெறி யுஞ்சிக
ரந்தான்
ஆண்டவ்
வேலையிடை
ஆழ்ந்தது தொன்னாள்
நீண்ட மேனிஇறை
நின்றளி யாமுன்
மாண்டு சாய்ந்துவிழு
மந்தர மென்ன. 356

813 வேறு
பொலங்கெழு சிகரிஅப்
புணரி சேர்தலின்
கலங்கின விரிதிரைக்
கைம்ம றித்ததால்
மலங்கின மொடுசுறா
அருந்தி மிங்கில
கிலங்களும் இரிந்ததங் 357
கிளைக ளோடுமே.
814 மாதலம் புகுந்திடுஞ்
சிகரி வாரியுட்
பூதரங் குய்த்திட
விரைவிற் போவது
வேதமுன் கொணர்தரு
மீனம் வேலையில்
பாதலம் புகுந்திடு
பான்மை போலுமே. 358

815 கழற்கறங் கியதெனுங்
கண்ணர் உந்திய
அழற்கொழுந் தாகிய
சிகரத் தாய்மணி
நிழற்பொலிந் திடுவன
நீல வேலையில்
தழற்பரந் தழுவதோர்
தன்மை போலுமே. 359

816 நாகர மணிவெயில்
நணுகும் வேலையில்
சீகரம் உம்பர்போய்த்
தெறிந்து மீள்வது
சாகரம் உற்றது
தழலென் றுன்னியே
மாகர வாரிநீர் வழங்கல
போலுமால். 360

817 காமரு சிகரியில்
கவைஇய மாமணி
ஏமுற நிழற்றிய
எழிலை நோக்கியே
பூமது நுகர்தரு
பொறிவண் டானவை
தாமரை வனமென
அயிர்த்துச் சாருமால். 361

818 பங்கய மணிநிழற்
பரப்பை நோக்கியே
இங்கிவை தசையென
எண்ணிப் புட்குலம்
நுங்கிய செல்வன
நொய்தின் எய்தியே
அங்கிகொ லெனச்சில
அகன்று போயின. 362

819 தெழித்திடும்

வேலையிற் செய்ய
சோதியால்
தழற்பொலி கோபுரந்
தரிப்பின் றேகலால்
கிழித்தன பணிபதி
கிளர்ந்து மற்றவர்
விழித்தனர் உருமென
வெருவி ஓடினா£¢. 363

பூதர்கள் யாம்பிடு
பொலங்கொள்
போபுரம்
ஓதநெஞ் சடைதலும்
உதிரங் கான்றதால்
சேதன மோவிது
செப்பும் என்றனர்
மீதுறு கதிர்மணி
வெயிலென் றுன்னலார். 364

821 பொற்பகல் சிகரியுட்
பொருந்தி ஆழ்பவர்
அற்பகல் நுகருமீன்
அவரை நுங்குமால்
முற்பக லோர்பழி
முடிக்கின் மற்றது
பிற்பகல் தமக்குறும்
பெற்றி என்னவே. 365

822 ஆனதொர் கோபுரம்
அளப்பி லாதமர்
தானவர் கிளையொடும்
வீழ்ந்த தன்மையால்
மீனுறு திரைக்கடல்
வௌ¢ளே மேற்செலா
மாநகர் எயில்தனை
வளைந்து புக்கதே. 366

823 காதிடும் இயற்கையில்
கால்கொண் டேகலிற்
பூதலம் வெருக்கொளப்
பொங்கும் ஆர்ப்பினின்
மீதமர் காரினில்
விமலன் விட்டிடும்
பூதரை நிகர்த்ததப்
புரிசை சூழ்புனல். 367

824 மைக்கடல் புவியினும்
மகேந்தி ரப்புரம்
மிக்கது போலுமென்
றைய மேற்கொளா
இக்கணம் நாடுதும்
என்று சென்றபோல்
புக்கது நகரிடைப்
புணரி நீத்தமே. 368

825 மீனெனும் மைந்தரை

மிசைந்த தானவர்க்
கானதொ ரிறுவரை
அணுகிற் றிவ்விடை
யானவர்ப்
பொருவனென்
றெண்ணிச் சேறல்போல்
போனதப் பதியினுட்
புணரி நீத்தமே.
369

826 இவ்வகை நிகழ்ந்திட
எறிந்த கோபுரம்
வெளவமுற் றிடுதலும்
பைம்பொன் மாமதில்
வெவ்வலி அரசர்கள்
விளிய ஈறிலாக்
கௌவைகொள்
திருநகர்க் காட்சித்

தாயதே. 370

827 எல்லைமற் றனையதில்
ஈண்டு சாரதர்
மல்லலம் புரிசையின்
வடாது பாங்கரை
ஒல்லையில் தம்பதத்
துதைப்பச் சாய்ந்தது
செல்லுற வீழ்ந்திடு சிகர
மேயென.
371

828 மாமதில் சாய்தலும்
வலிய பூதர்கள்
காமரு நகரினுட் கலந்து
நண்ணினார்
ஏமரு கடங்கலுழ்
இபங்கள் ஈண்டியோர்
தாமரை மலர்த்தடந்

தன்னிற் புக்கபோல். 372
829 கானுறு பங்கயக்
கடவுட் கிப்பகல்
போனதோர் காலையிற்
புணரி யாவையும்
மாநிலங் கொள்வது
மானப் பூதவெஞ்
சேனைகள் மகேந்திர
புரத்திற் சென்றவே.
373

830 புக்கனர் வீரர்கள்
புயலின் மேனியுஞ்
செக்கரங் குஞ்சியாந்
தீயுங் கைகளாய்
மிக்கெழு புணரியும்
வேறு வேறுறா
மைக்கடல் உலப்பில

வருவ போலவே. 374

831 துதித்திட அரியவன்
நகரில் துண்ணென
எதிர்த்திடு தானவர்
இனத்தை ஒல்லையில்
சிதைத்தனர் மாளிகை
சிகரம் யாவையும்
உதைத்தனர் வீட்டினர்
உயர்ந்த பூதரே. 375

832 மதரொடு குறுகும்அவ்
வயவெம் பூதர்கள்
அதிர்கழல் அடிகளால்
அளப்பில் மாளிகை
பிதிர்பட உந்தலும்
பிறங்கு பூழிகள்
கதிருறு கதியினுங்
கடந்து போனவே. 376

833 வேறு
அங்கவ் வெல்லையிற்
சாரத வேந்தர்கள்
அயில்வேற்
புங்க வன்தனை
நீங்கியாம்
அவுணர்கோன் புரத்துள்
இங்கி னிப்படர் கின்றது
தக்கதன் றென்னாச்
செங்க ளந்தனின்
மீண்டனர் சேனையுந்
தாமு. 377

834 ஆன காலையிற்
பூதர்தஞ் செய்கைகள்
அனைத்தும்
ஞான நாயகன்

காண்குறா நல்லருள்
புரிந்து
மான வேற்படை
வீரரும் அமரரும்
வழுத்தச்
சேனை யாவையுங்
கொண்டுதன் பாசறை
சேர்ந்தான். 378

835 பாச றைப்புகு
குமரவேள் பாரிடப்
பகுதி
ஆச றப்புனை ஆவணச்
சூழல்போய் அமர
வாச வத்தனிக் கடவுளா
தியர்புடை வழுத்த
ஈச னிற்சிறந் தரியணை 379
தன்னில்வீற் றிருந்தான்.

836 ஈண்டு தானவர்
இலக்கம்வெள¢
ளத்தரும் இன்னே
மாண்டு போயினர்
அனையரை மலிகதிர்க்
கரத்தால்
தீண்டி வான்மையிற்
குறைந்தனன்
என்றுசெஞ் சுடரோன்
ஆண்டு மூழ்குவான்
புக்கென அளக்கரை 380
அடைந்தான்.
837 வேறு
புரந்தர னாதியர்
புன்மை நீக்கியே
பெருந்திரு வுதவுவான்
பிரான்தன் காதலன்

இருந்தனன் பாசறை
ஈது நின்றிடத்
திருந்தலர் மாட்டுறுஞ்
செய்கை செப்புவாம். 381

838 ஒருவரும் ஔத்தினும்
உணர்வு றாவகை
அருவம தாகியே
அகன்று சூர்முதல்
பொருவரு மகேந்திர
புரத்துக் கோயிலுள்
திருமகள் மணமனைச்
சேறல் மேயினான். 382

839 பஞ்சடி நூபுரப் பதுமை
கோயில்போய்
அஞ்சியல் அடுத்தமெல்
லமளி மேலுறாத்
துஞ்சலன் யாரொடுஞ்

சொல்லும் ஆடலன்
வெஞ்சமர் வினையமே
உன்னி மேவினான். 383
840 ஆனதொ ரெல்லையில்
அரசன் போர்செயப்
போனதும் பொருதலும்
புறந்தந் தோமென
மாநகர் அதனிடை
வறியன் வந்ததும்
பானுவின் பகைஞனுக்
கொற்றர் பன்னினார். 384
841 சொன்னடை மந்திரத்
தொடா¢பும் மாயமும்
தன்னுறு படைகளும்
சாதனஞ் செய்வோன்
அன்னது கேட்டலும்
அலக்கண் எய்தியே

மன்னுறு கடிநகர்
வல்லை ஏகினான். 385

842 மணிநிரை இகலியே
மாறு வில்லுமிழ்
இணையறு சினகரம்
எய்திச் சேக்கைமேல்
தணிவறு சூழ்ச்சியோ
டமர்ந்த தாதைதன்
துணையடி வணங்கியே
தொழுது கூறுவான். 386
843 மாற்றலர் யாவரும்
மறிய வல்லைபோர்
ஆற்றுதி யாலென ஐய
முற்பகல்
சாற்றினை விடுத்தனை
தமியன் ஏகியே

ஏற்றவர் தம்முடன்
இகல்செய் தேனரோ. 387
844 உற்றிலன் அறுமுகன்
ஒழிந்த வீரர்கள்
சுற்றிய படையொடு
துவன்றிப்
போர்செய்தார்
பற்றிய மோகமாப்
படையைத்
தூண்டியான்
மற்றவர் உணர்ச்சியும்
வலியும் மாற்றினேன். 388
845 சென்றமர் இயற்றிய
செறுநர் யாரையும்
வென்றனன் அத்துணை
விமலன் மாமகன்
ஒன்றொரு மாப்படை

உய்ப்ப என்படை
வன்றிறல் நீங்கியே 389
வருந்தி மீண்டதே.

846 அன்னதோர்
பான்மையால்
அனையா¢ யாவரும்
பின்னுணர் வெய்தியே
பெயர்ந்து போயினார்
என்னிது வெற்றியென்
றியானும் மீண்டனன்
உன்னொடும்
உரைத்திலன் உள்ளம்
வெள¢கினேன். 390

847 நெற்றியங் கண்ணுடை
நிமலன் ஏனையோர்
முற்றரு படைகளால்

முடிவின் மாயையால்
பற்றலர் யாரையும்
படுத்து நாளையே
வெற்றிகொள்
குவனெனா நென்னல் 391
மீண்டனன்.

848 ஞாயிறு வந்தபின்
நண்ண லா£¢மிசைப்
போயமர் இயற்றிடப்
புறத்திற் சென்றனன்
ஆயதன் முன்னரே
அனிகந் தன்னுடன்
ஏயென ஏகினை எந்தை
நீயென்றார். 392

849 வரந்தனில் அழிவுறா
வள்ளல் ஈண்டுறு

திருந்தல ருடன்அமர்
செய்தற் காகவோர்
அருந்துணை
வேண்டலை அதனை
உன்னிமீண்
டிருந்தனன் இப்பகல் 393
ஈதென் செய்கையே.
850 ஓர்ந்திலை இத்திறம்
உணர்வு ளாரொடுந்
தேர்ந்திலை
என்னையும் விளித்துச்
செப்பிலை
சார்ந்திடு நாற்பெருந்
தானை தன்னொடும்
போ¢ந்தனை
அமர்க்கிது பெருமைப்
பாலதோ.

394

851 அமரருக் காக்கமும்
அவுணர்க் கேக்கமும்
அமையவர்
முதல்வனுக் கின்பும்
நல்கினை
குமரனைக்
கணங்களைக் குறித்து
மன்னநீ
சமா¤னுக் கேகுதல்
தலைமை யாகுமோ. 395

852 திகழ்ச்சிகொள் மேலவர்
சிறியர் தம்மொடு
நிகழ்ச்சிகொள்
போரிடை நேர்வ
ரேயெனில்
புகழ்ச்சிய தில்லையால்

பொருது வெல்லினும்
இகழ்ச்சியின் பாலதாம் 396
எவரெ வர்க்குமே.

853 சென்றது கிடந்திடச்
சிறியன் என்னினும்
ஒன்றிவண்
மொழிகுவன் உள்ளங்
கோடியால்
இன்றிர வகன்றபின்
ஏகி யாரையும்
வென்றிகொண்
டேகுவன் விடுத்தி
யாலெனை.
397

854 கொற்றவை சிறுவனைக்
கொற்றங் கொள்வதும்
சுற்றுறு படையயான்

தொலைக்குந்
தன்மையும்
ஒற்றுவர் கண்டுமுன்
உரைக்க எந்தைநீ
தெற்றென மகிழ்ச்சியிற் 398
சிறந்து வைகுதி.
855 வேறு
கூரிய வேற்படை
கொண்டுடை யோனை
வீரர்கள் தம்மொடு
வெற்றிகொ ளேனேல்
வாரலன் ஈண்டு
மகிழ்ந்திறை நல்கும்
பேரர சாட்சி
பிடிக்கிலன் என்றான்.
399
856 என்பது கேட்டலும்

எவ்வுல கிற்குந்
துன்பு புரிந்திடு சூரபன்
மாவாம்
முன்பன் மகிழ்ந்து
முகத்தெதிர் நிற்குந்
தன்புதல் வற்கிது 400
சாற்றுதல் உற்றான்.

857 மூவர்கள் தாங்களும்
முச்சக முள்ள
தேவரும் ஐயிரு
கிக்குடை யோரும்
ஏவரும் ஏற்கினும்
எம்பியை அட்ட
மேவலன் ஆற்றலை
வெல்லரி தம்மா. 401

858 பன்னிரு செங்கை
படைத்துள சேயோன்

தன்னொ டெதிர்ந்து
சமர்த்தொழில்
செய்வார்
என்னல தில்லை
இவன்சிறி யோனென்
றுன்னலை வன்மையின் 402
ஒப்பில னேகாண்.
859 குன்றம் எறிந்திடு கூரிய
வேற்கை
வன்றிற லாளனை
வன்மையில் யானே
வென்றிடு கின்றனன்
மேலது நிற்க
ஒன்றுள தைய
உரைப்பது கேண்மோ. 403
860 ஒற்றென வந்துநம்
மூர்அலை வித்துப்

பற்றலர் நீடு
படைக்கிறை யாகுங்
கொற்ற வனைத்தனி
கூவி மலைந்து
செற்றனை ஏகுதி
சேனையொ டென்றான். 404

861 தந்தை புகன்றிடு
தன்மையை ஓரா
எந்தை பிராற்குளம்
இத்திற மாமேல்
முந்திறை தன்னின்
முடிப்பனி தென்ன
மைந்தனை நோக்கி
மகிழ்ந்தனன் மன்னன். 405

862 அடுசமர் செய்வகை
ஆங்கவன் ஏக
விடையது நல்கி

வியத்தகு மன்னன்
இடையுறு சூழ்ச்சிக
ளியாவும் இகந்து
மிடைதரு தொல்வள
மேவி இருந்தான். 406

863 தாதைதன் ஏவல்த
லைக்கொடு சென்றே
ஆதவன் மாற்றல
னாகிய மைந்தன்
ஏதமில் தன்குலம்
ஏகலும் அங்கண்
தூதுவர் பற்பலர்
துண்ணென வந்தார். 407
864 துங்கம துற்றுள சூர்தரு
மைந்தன்
செங்கம லம்புரை சீறடி
தன்னைத்

தங்கண் முடிக்கொடு
தாழ்ந்தனர் நின்றே
இங்கிவை கேட்க
எனாமொழி குற்றார். 408

865 வேறு
மன்னவன் இன்றுபோய்
மலைந்து மீண்டபின்
ஒன்னலன் மாட்டுறும்
உலப்பில் பூதர்கள்
இந்நகர் வடாதுசார்
எய்திக் காவலோன்
தன்னுயிர் கொண்டனர்
தானை சிந்தினார். 409
866 தகுவர்தம் மாப்படை
தலைய ழிந்தபின்
அகலிரு விசும்பளந்

தாண்டு நின்றிடு
சிகரியைக் கீண்டுதஞ்
செங்கை யாலெடா
வெகுளியொ
டளக்கரின் மீது
வீசினார். 410
867 நீடிய சிகரிபோய் நேமி
புக்கபின்
மாடுறு வடபுல மதிலை
முற்றவுஞ்
சாடினர் மீண்டனர்
தலைவ இந்நகர்
கோடில தாங்கடற்
குட்டம் போன்றதே. 411
868 என்றலும் வினவியே
ஏந்தல் தன்புடை
சென்றிடும் வயவரிற்

சிலரை நோக்கியே
வன்றிற லுடையநம்
மரப்ல் தச்சனை
ஒன்றொரு
கணத்தின்முன்
உய்த்தினர் என்னவே. 412

869 ஆயவர்
விரைந்துபோய்
அவுணத் தச்சனை
மேயினர் இறைமகன்
விளித்து ளானெனக்
கூயினர் வருகெனக
கொடுவந் துய்த்தனர்
மாயிருங் கதிரைமுன்
வெகுண்ட
மைந்தன்முன். 413

870 தன்னடி வணங்கியே

தச்சன் நிற்றலும்
மன்னவர் மன்னவன்
மதலை வல்லைநீ
இந்நகர் வடமதில் சிகரி
ஏனவுந்
தொன்னெறி
அமைக்கெனச்
சொற்றுத் தூண்டினான். 414
871 எல்லைமற் றன்னதின்
எல்லை தன்பகை
கல்லுயர்
மொய்ம்பன்மா காயன்
என்பதோர்
வல்லவு ணன்தனை
வருதி என்றுகூய்
ஒல்லையின்
இனையதொன்

றுரைத்தல் மேயினான். 415
872 சேயுயர் வடமதிற் சிகரி
தன்னிடைப்
போயினை அந்நெறி
புரத்தி யால்எனா
ஆயிரப் பத்தெனும்
அணிக வெள¢ளமோ
டேயினன் தானுறும்
இருக்கை எய்தினான். 416
873 அத்துணை ஏகியே
அவுணர் கம்மியன்
உத்தர நெடுமதில்
ஓங்கு கோபுரஞ்
சித்திர வுறுபபொடு
சித்தத் துன்னியே
வித்தக வன்மையால்
விதித்துப் போகவே. 417

874 அடுகரி புரவிதேர்
அவுணர் தானையாங்
கடலுடன் சென்றுமா
காயன் என்பவன்
வடமதிற் சிகரியின்
வாய்தல் போற்றியே
சுடர்கெழு தீபிகை சுற்ற
வைகினான். 418

875 ஆயது நிகழ்வுழி ஆழி
வெற்பின்வாய்
ஞாயிறு நணுகநள்
ளிருளின் யாமினி
போயது மெய்ப்புலன்
புந்தி சேர்வுழி
மாயைய தகன்றிடும்
வண்ணம் என்னவே. 419

876 கங்குலென் றுரைபெறு
கடவுட் கற்புடை
நங்கையை மேவுவான்
நயப்பு மேற்கொளா
அங்கவ
ளைத்தொடர்ந்து தணுகு
வானெனச்
செங்கதிர்
அண்ணல்கீழ்த் 420
திசையில் எய்தினான்.

ஆகத் திருவிருத்தம் - 876

---------

---------------------------------------------------------------------------

This file was last revised on 18 Nov. 2007

Feel free to send corrections and comments to the webmaster.